Registered as a Newspaper | பக்கங்கள் 16 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 03

புதன்கிழமை
29 நவம்பர் 2023

கார்த்திகை 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"பேசாமல் வீரவன்ச சாத்திரம் பார்க்கிற வேலைக்குப் போனால் நல்லா உழைக்கலாம் பாருங்கோ"

கொக்குத்தொடுவாயில்

# வீதிக்கு அப்பாலும் விரிகிறது புதைகுழி!

ஏராளம் சடலங்கள் இருக்கலாம்; ஸ்கான் ஆய்வில் திடுக்கிடும் தகவல்

**முல்லைத்தீவு, நவம்பர் 29**

**கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி தற்போது அகழப்பட்டதை விடவும் பல மடங்கு பெரிதாக இருக்கலாம் என்றும், வீதிக்குக் கீழ்ப் பகுதியிலும் புதைகுழி நீண்டு செல்லலாம் என்றும் ஊகிக்கப்படுகின்றது. இது தொடர்பான தீர்க்கமான கலந்துரையாடலொன்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இன்று இடம்பெறவுள்ளது.**

15

## புலிச் சின்னத்தால் இளைஞர் கைது!



யாழ்ப்பாணம், நவ. 29
விடுதலைப்புலிகள் அமைப்பின் சின்னம் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் படம் என்பன பொறிக்கப்பட்ட ஆடையுடன் மாவீரர் நாள் நினைவேந்தலில்

15

## தேர்தலை நடத்துக!

சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, நவ. 29
மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும். தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் வலியுறுத்தியுள்ளார்.

15



ஜனவரியில்

## அரசுக்குள் பூகம்பம்

கொழும்பு, நவ. 29
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது. ஜனவரி மாதம் ஆகும்போது

15

## பிணையில் சென்றவர் சாவு!

வவுனியா, நவ. 29
வெளிநாட்டுக்கு அனுப்புதல் தொடர்பான கொடுக்கல் வாங்கல் தொடர்பில் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, வவுனியா நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட

15

## பிணை!

வவுனியா, நவ. 29
வவுனியாவில் விடுதலைப் புலிகளுக்கு சேறுபூசும் விதமாகக் காட்சிப்படுத்தப்பட்ட பதாகைகளை அகற்ற முற்பட்ட முன்னாள் போராளி பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், குறித்த சம்பவத்தில் செய்திசேகரித்துக் கொண்டிருந்த சுயாதீன ஊடகவியலாளருக்கு எதிராக

15

## நிமோனியாவால் இளம்தாய் இறப்பு

இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்து ஆறே நாளில் துயர்கதை



கொழும்பு, நவ. 29
இளம் தாயொருவர் இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்த ஆறே நாள்களில் நிமோனியாக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளார். வல்லை வீதி, தொண்டைமானாறைச் சேர்ந்த விதுஷா நிரூபன் (வயது -25) என்பவரே உயிரிழந்தவராவார்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த

15

## மின்சாரம் தாக்கி இளைஞர் சாவு!

யாழ்ப்பாணம், நவ. 29
சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள நிதி நிறுவனம் ஒன்றின் பணியாளர் மின்சாரம் தாக்கி நேற்று உயிரிழந்துள்ளார். கஜிந்தன் (வயது-26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

15







மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் சொத்துகள் அநுராதபுரத்தில் அழிப்பு!



*அநுராதபுர கதிரேசன் ஆலயப் பிரதமகுரு வேதனை*

**யாழ்ப்பாணம், நவ. 29**

**அநுராதபுர காலத்து தமிழ் மக்களின் எஞ்சிய வரலாற்றுச் சொத்துகளான ஆலயம், பாடசாலைகள் என்பவற்றில் தமிழ் மரபுகள் திட்டமிடப்பட்டு அழிக்கப்படுகின்றன. எஞ்சிய தமிழ்ச் சொத்துகளைக் காப்பாற்றிக்கொள்வதற்கு நாம் முயலவேண்டும்.**

-இவ்வாறு யாழ்.ஊடக அமையத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அநுராதபுர கதிரேசன் ஆலயப் பிரதம குரு ஞானச்சந்திரா குருக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்

அநுராதபுரத்தில் வாழ்ந்த தமிழ் மக்களில் அநேகமானோர் 1985 ஆம் ஆண்டு வன்செயல் காரணமாக பிரதேசத்தை விட்டு வெளியேறி விட்டார்கள். தற்போது அநுராதபுரத்தில் எஞ்சிய தமிழர் சொத்துகளான கதிரேசன் கோயில், விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயம், நுவர கர பிள்ளையார் ஆலயம் என்பன அழிக்கப்படும் அல்லது மாற்றப்படும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன.

விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் திருநீறு பூசுவதற்குத் தடை, ஒன்றுகூடலில் இந்துமதப் பிரார்த்தனை இல்லை, மரத்தடியில் சைவசமயப் பாடம் கற்பிக்கும் நிலை என்பன ஏற்பட்டுள்ளன. பாடசாலை மண்டபங்களில் பொறிக்கப்பட்ட தமிழ்ப் பெயர்கள் மாற்றம் செய்யப்பட்டு முஸ்லிம் சார்ந்த பெயர்கள் பொறிக்கப்படுகின்றன. அநுராதபுரத்தின் எஞ்சிய தமிழர் சொத்துகளைக் காப்பாற்ற தமிழ்ப் பிரதிநிதிகள் குரல்கொடுக்கவேண்டும்- என்றார். (ச-20)

## தேர்தலை நடத்த அரசுக்கு அழுத்தம்

கொழும்பு, நவ.29

மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சீ.அலவத்துவல வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவேண்டும். அதற்கு ஏதேனும் சட்டச்சிக்கல் எனில், பழைய முறையிலாவது தேர்தல் நடத்தப்படவேண்டும். அதற்குத் தேவையான சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டால் அதற்கு முழு ஆதரவு வழங்கப்படும்.

தேர்தலை ஒத்திவைக்காமல், அதை நடத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கை. இது தொடர்பில் பிரதமர் கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (எ-44)




## வடக்கு உணவு உற்பத்தி புதிய செயலி விரைவில்

*ஆளுநர் நடவடிக்கை*

யாழ்ப்பாணம், நவ. 29

வடக்கு மாகாணத்திலுள்ள விவசாயிகள் மற்றும் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வோர் சந்தைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக 'பார்ம் ரூ கேற்' என்ற புதிய செயலி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் பணிப்புரைக்கமைய இந்தச் செயலிக்கான மென்பொருள் வடிவமைப்புச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த வருடம் ஜனவரி மாதம் இந்தச் செயலியை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் செயலியூடாக நுகர்வோர் நேரடியாகத் தங்களுக்குத் தேவையான உற்பத்திகளை மொத்தமாகவோ அல்லது சில்லறை விலையிலோ கொள்வனவு செய்யமுடியும்.

விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் நியாயமான விலையைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

மரக்கறிகள், பழங்கள் மற்றும் ஏனைய உற்பத்திப் பொருள்களை காலாவதியாகும் முன்னர் விற்பனை செய்துகொள்ளலாம். நுகர்வோருக்கும் தரமான, புதிய உற்பத்திகளை நேரடியாகப் பெற்றுக் கொள்ள வழி வகுக்கும்.

விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், உற்பத்திப் பொருள்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய இடம், உற்பத்திகளின் தரம், கையிருப்பிலுள்ள அளவு, விலை உள்ளிட்ட அனைத்து விடயங்களும் இந்தச் செயலியில் தரவேற்றம் செய்யப்பட்டிருக்கும்.

இந்த விடயங்கள் அனைத்தையும் துறைசார் திணைக்களங்களின் கிராமிய மட்ட அலுவலர்கள் மேற்பார்வை செய்வதுடன், விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்கி ஊக்கப்படுத்தவுள்ளனர்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சு, கூட்டுறவு, கிராமிய அபிவிருத்தி, தொழிற்றுறை, கால்நடை, உள்ளூராட்சித் திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் இந்தப் புதிய முயற்சி நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ச-20)

## உயர்ந்தது தனி நபர் கடன்

கொழும்பு, நவ.29

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதால் நாட்டின் தனி நபர் கடன்சுமை உயர்வடைந்துள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டிலிருந்து 2023ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் ரூபாவின் பெறுமதி 45 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

தனிநபர் கடன்சுமை அதிகரிப்புக்கு 90 சதவீதத்துக்கு இது தாக்கம் செலுத்தியுள்ளது என்றும் கூறியுள்ளார். (எ-இ)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 29

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தால் நடத்தப்படவுள்ள சுயதொழில் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

காளான் சார் உணவுப்பொருள்கள் உற்பத்தி, விளக்குமாறு உற்பத்தி, ஊறுகாய் வகை உற்பத்திகள் உள்ளிட்ட பயிற்சிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சுயதொழில் முயற்சியாளர்கள் பங்கேற்க விரும்பின் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் 021 226 4958 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று கரவெட்டிப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

## பிணைமுறி ஏமாற்றம்

கொழும்பு, நவ.29

பிணை முறி விற்பனை மூலம் எதிர்பார்த்தளவு வருமானம் கிடைக்காமையால் அரச வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தின் மூலம் பிணை முறி விற்பனை மூலம் எதிர்பார்த்த வருமானத்தை ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பிணைமுறி விற்பனை மூலம் 250 பில்லியன் ரூபாவைத் திரட்டுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. எனினும் 73 பில்லியன் மட்டுமே பிணைமுறி விற்பனை மூலம் கிடைத்துள்ளது. (எ-6)

## கட்சி தாவும் எம்.பி.க்கள்

கொழும்பு, நவ.29

அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் விரைவில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொள்ளக் கூடுமென அந்தக் கட்சியின் வட்டாரங்களில் அறிய முடிகிறது. (எ-இ)

## பாம்புகளால் மக்கள் அச்சம்

சாவகச்சேரி, நவ. 29

தென்மராட்சிப் பிரதேசத்தில் மழை வெள்ளத்துடன் பாம்புகள் குடியிருப்புகளுக்குள் வருவதால் மக்கள் அச்சமடைகின்றனர்.

மழையால் பாம்புப் புற்றுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் பாம்புகள் குடியிருப்புகளுக்குள் வருகின்றன.

விசப் பாம்புகள் குடியிருப்பு களுக்குள் புகுவது அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் அச்சத்துடன் நடமாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ரி-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு - கிழக்கு

# சிறுவர்கள் கடத்தல் விசாரணை தீவிரம்

**யாழ்ப்பாணம், நவ.29**

**வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சிறார்கள் மலேசியா ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்குக் கடத்தப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கப் பணிக்கப்பட்டுள்ளது என்று மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எமது நாட்டில் உள்ள 13 சிறார்கள் மலேசியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பல நாடுகளுக்கு விற்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் உடன் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆகியவற்றுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

இலங்கையில் உள்ள சிறார்கள் மலேசியா ஊடாகப் பிற நாடுகளுக்கு அனுப்பப்படும் ஆட்கடத்தல் வியாபாரம் தொடர்பில் முன் வைக்கப்பட்டுள்ள முறைப்பாடு சம்பந்தமாக சி.ஐ.டி.யினர் முன்னெடுத்த விசாரணைகளில் சில தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் பிரகாரம் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 18 வயதுக்குக் குறைவான சிறார்கள் மலேசியாவுக்கு அனுப்பப்படுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது - என்றார். (ம-44)

## 1,996 வீடுகளுக்கு சீனா நிதியுதவி!

கொழும்பு, நவ. 29

குறைந்த வருமானம் பெறுபவர்கள், படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கென ஆயிரத்து 996 வீடுகள் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் சீனாவுடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும், சீன அரசாங்கத்தின் சார்பாக இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஷென்ஹோங்வும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்தத் திட்டத்துக்கு சீன அரசு 552 மில்லியன் யுவான் நிதி (இலங்கைமதிப்பில் 24.48 பில்லியன்) வழங்குகிறது. (ச-இ)

## தூய்மைப் பணியில் ஹரின்

கொழும்பு, நவ. 29

கிரிக்கெட் விளையாட்டுத்துறையைத் தூய்மைப்படுத்தி ஐ.சி.சி. தடையைக் கூடிய விரைவில் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று விளையாட்டு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அனைவருடனும் ஒன்றிணைந்து இந்தக் கிரிக்கெட் விளையாட்டை மீண்டும் தூய்மைப்படுத்த நான் விரும்புகிறேன். கூடிய விரைவில் ஐ.சி.சி. தடை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (எ-இ)

## மின்கம்பத்தில் தீ



யாழ்ப்பாணம், நவ. 29

கோப்பாய் இராசபாதைப் பகுதியில் மின்கம்பத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீரென ஏற்பட்ட தீயால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

தனியார் காணியொன்றில் உள்ள மின்கம்பத்தின் கிளைகள் உரசியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. பொதுமக்கள் மிகவிரைவாகச் செயற்பட்டு மின்சாரசபைக்கு அறிவித்ததையடுத்து பெரும் அசம்பாவிதம் ஒன்று தவிர்க்கப்பட்டது. (ம-27-20)

## காலநிலை சவால்களை எதிர்கொள்ளத் திட்டங்கள்



காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் எதிர்கால சவால்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுக்கும் வகையில் பலமான சட்டங்கள் மற்றும் கொள்கைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன என்று சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்கள் உட்பட பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஏற்பட்டுள்ள சுற்றாடல் மாசு மற்றும் சுற்றாடல் அழிவுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் இவ்வாறான பாதிப்புகளைத் தடுப்பது தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் எதிர்கொள்ள நேரும் பாதிப்புகளை முடிந்தளவு கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

## புதினம் தெரியுமோ?

**இன்னொரு உயிர் அநியாயமாப் போயிருக்குது. இரட்டைப் பிள்ளையளை நாலைஞ்சு நாளைக்கு முன்னம் பெத்த ஒரு இளம் தாய், அம்மாள் வருத்தம் வந்து அது நிமோனியாவாக்கி செத்ததை செய்தியில வாசிச்சிருப்பியள். ஆனா ஆஸ்பத்திரிக்காரர் மனம் வைச்சிருந்தால், மனிதாபிமானத்தோட நடந்திருந்தால் இந்தச் சாவைத் தடுத்திருக்கலாம் எண்டு அந்தத் தாயின்ர சொந்தக்காரர் அழுது புலம்புகினம்.**

**இந்தத்தாய் இரட்டைப் பிள்ளை பெத்து மூண்டாம் நாளே அம்மாள் வருத்தம் வந்திட்டு. அந்த வருத்தத்துக்கு ஆஸ்பத்திரியில சிகிச்சை குடுக்கிறேலை. 'வீட்ட இருந்தால் மாறிடும். இஞ்ச இருந்தால் மற்ற ஆக்களுக்கும் தொத்திப் போடும். அதால இங்கயிருந்து வீட்டை போங்கோ' எண்டு அடிச்சுக் கலைக்காத குறையாத்தான், பச்சை வயித்தோட அவாவை ஆஸ்பத்திரியில இருந்து அனுப்பி இருக்கினம். வீட்டை போய் இருந்தாலும், பிள்ளை பெத்த பச்சை உடம்பு இந்த வருத்தத்தை தாங்க ஏலாமல், நிமோனியாவாக்கி, பிரைவேட் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயும் அந்த இளம் தாயின்ர உயிரைக் காப்பாத்த ஏலாமல் போட்டுது. அம்மாள் வருத்தம் தொத்து வருத்தம் தான். ஆஸ்பத்திரியில அவா இருந்தால் அந்த வார்ட்டில இருக்கிற மிச்சத் தாய்மாருக்கும், சின்னக் குழந்தையளுக்கும் தொத்தவும் சான்ஸ் இருக்குத்தான். அப்பிடியெண்டால் பிள்ளை பெத்த மூண்டாம் நாளே அம்மாள் வருத்தம் வந்தால் அவையை வீட்டை கலைச்சு விடுறதுதான் ஆஸ்பத்திரிக்காரருக்கு இருக்கிற ஒரே வழியா? அங்க தனியா ஒரு இடத்தில இந்த தாயைத் வைச்சுப் பராமரிச்சிருந்தால் வேற ஆக்களுக்கும் அது தொத்தாது. இப்பிடி அநியாயமா அவான்ர உயிரும் போயிருக்காது.**

**பிள்ளை பெத்த ஒராளுக்கு அம்மாள் வருத்தம் வந்தால் நிமோனியா ஆக்கி, இப்பிடிச் சாகவும் சான்ஸ் இருக்கெண்டது டொக்டர்மாருக்கு தெரியாதோ? அப்பிடி அம்மாள் வருத்தத்தால அவாவுக்கு நிமோனியா ஆக்காதெண்டால், ஏன் நிமோனியா வந்தது எண்டு ஆராயவேணும். அப்பிடியில்லாமல், அம்மாள் வருத்தத்தோட அனுப்பினால் நிமோனியா ஆக்கும் எண்டு தெரிஞ்சும், அதை ஆஸ்பத்திரிக்காரர் செய்திருந்தால், இதையும் ஒரு மருத்துவக் கொலையாத்தான் எடுக்கோணும். ஆஸ்பத்திரிக்காரருக்கு இப்பிடி உயிர் போறது பெரிய விசயம் இல்லை. ஆனால் அந்தக் குடும்பமே இந்த ஒரு உயிர் போனதால தலைகீழாப் போட்டுதே. அந்த இரட்டைப் பிள்ளையளையும் தாயில்லாமல் வளர்த்து எடுக்கிறது அவ்வளவு சாதாரண விசயம் இல்லை.**

**கிட்டடியில ஒரு சின்னப்பிள்ளைக்கு பிழையா மருத்துவம் செய்து, கை எடுத்த கதை ஓயுறதுக்குள்ள திரும்ப, இப்பிடியொரு பிரச்சினை நடந்திருக்கு. இப்ப அந்தத் தாயின்ர உடம்பில சில 'சாம்பிள்கள்' கொழும்புக்கு அனுப்பப்பட்டிருக்கு. அந்தரிசல்ட் வர ரண்டு கிழமையாகும். அதுக்குள்ள இந்த விசயத்தை எல்லாரும் மறந்துபோடுவம்.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், நவ. 29
தெல்லிப்பழை வீணாக்கடவை காசிவிநாயகர் ஆலய விநாயகர் விரதமும் இலட்சார்ச்சனையும் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் 18ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது.
மேற்படி காலப் பகுதியில் தினமும் காலை 8.30 மணிக்கு அபிஷேகம், காலை 9.30 மணிக்கு விசேட பூசை, மு.ப.10 மணிக்கு இலட்சார்ச்சனையும் ஹோமமும் இடம்பெறும். அடுத்தமாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை இலட்சார்ச்சனை பூர்த்தி, மாலை 4 மணிக்கு கஜமுகாசூர சங்காரமும், மறுநாள் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சங்காபிஷேகமும் நடைபெறும். (ம-66)

* * * *

யாழ்ப்பாணம், நவ. 29
இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய விநாயகர் விரத இலட்சார்ச்சனைப் பெருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி அடுத்தமாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.
இலட்சார்ச்சனைப் பெருவிழாக் காலப் பகுதியில் தினம்தோறும் மாலை 3.30 மணிக்கு அபிஷேகம், தொடர்ந்து மூலஸ்தானப் பூசை, மாலை 4.30 மணிக்கு விசேட வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து இலட்சார்ச்சனையும் அதனைத் தொடர்ந்து பெருங்கதைப் படிப்பும் நடைபெறும்.
அடுத்தமாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கஜமுக சங்கார உற்சவமும் இலட்சார்ச்சனைப் பூர்த்தியும் இடம்பெறும். மறுநாள் 18ஆம் திகதி திங்கட்கிழமை மாலை விநாயகர் சஷ்டி உற்சவம் இடம்பெறும். (ம-66)

* * * *

சாவகச்சேரி, நவ.29
சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் கோவிலில் பிள்ளையார் கதை படிப்பும், லட்சார்ச்சனையும் மற்றும் நவராத்திரி உற்சவமும் இன்று காலை ஆரம்பமாகித் தொடர்ந்து 21 தினங்கள் நடைபெறும்.
பிள்ளையார் கதை படிப்பு நிறைவில் கஜமுகா சூரன்வதம் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி-9)

* * * *

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ.29
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 5மணிக்கு நடைபெறவுள்ளது.
இளஞ்சைவப்புலவர் ச.நவநீதன் "விநாயகனே வெவ்வினை வேரறுக்க வல்லான்" எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ரி)

* * * *

யாழ்ப்பாணம், நவ. 29
சைவவாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிகாமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த பெரியபுராணச் சிறப்பு சொற்பொழிவுத் தொடர் 34 (மூர்க்கநாயனார்) தெல்லிப்பழை பன்னாலை திருவருள்மிகு சிவபூதராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 4மணிக்கு இடம் பெறவுள்ளது.
நிகழ்வில் சைவப்புலவர் செ. த. குமரன் "அடியவர்கள் உணவு உண்ட பின்னரே தான் உண்ணும் நாயனார்" எனும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ரி)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை. ஆரோக்கியத்திலும் அக்கறை அவசியம். உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர் பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். செயல்கள் எதிர்பார்த்தபடி நிறைவேறும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உடல் நலனில் கவனம் தேவை. தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் பணவரவு ஏற்பட வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** தொடங்கும் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். ஆதாயம் கிடைக்கும். உறவினர்களால் செலவுகளுக்கு வாய்ப்பு உள்ளது.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழிநடத்துவீர்கள். உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்ளும்போது உரிய கவனம் தேவை. வழக்கமான பணிகளிலும் எச்சரிக்கை அவசியம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** பொறுமையுடன் செயற் பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம்.. குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்களில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்பு நீங்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான பிரச்சினை ஒன்றில் வாழ்க்கைத் துணை உங்களுடைய ஆலோசனையைக் கேட்டு வருவார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** செயல்கள் அனுகூலமாகும் நல்ல நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சங்கடங்கள் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆதாயம் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும்.

**மீனம்:** சோர்வு நிறைந்திருக்கும். புதிய முயற்சிகளை தொடங்கு வது நல்லது. தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

# எழுவைதீவுக்கு விரைவில் நிரந்தர மருத்துவ அதிகாரி


### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நம்பிக்கை

**யாழ்ப்பாணம், நவ. 29**

**எழுவைதீவு மருத்துவமனையில் நிரந்தர மருத்துவர் எவரும் இல்லாத நிலையில், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனை மருத்துவர்களே மனிதாபிமான அடிப்படையில் அங்கு சேவையை வழங்கி வருகின்றனர் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

'உதயன்' பத்திரிகையில் வெளியான நிரந்தர மருத்துவர் இன்றி அந்தரிக்கும் எழுவைதீவு என்ற செய்தி தொடர்பாக அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந்த மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்று நாம் சுகாதார அமைச்சரைக் கோரியுள்ளோம். அடுத்துவரும் நியமனத்தில் மருத்துவ அதிகாரி நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கின்றோம். கடந்த இரு ஆண்டுகளாக ஊர்காவற்றுறை மருத்துவர்களே மனிதாபிமான அடிப்படையில் சேவைகளை வழங்கி வருகின்றனர் என்று அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## குற்றங்கள்



### கஞ்சாவுடன் கைது

யாழ்ப்பாணம், நவ.29
80 கிராம் கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையின்போதே கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட இளைஞனை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-23)

### இருவருக்கு மறியல்

கொழும்பு, நவ.29
காத்தான்குடிப் பிரதேசத்தில் 120 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட 4 பேரில் இருவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார். (எ-இ)

### மரணத்தில் சந்தேகம்

கொழும்பு, நவ.29
நீர்கொழும்பு பொலிஸாரால் இராகலை நகரில் கைது செய்யப்பட்ட 40 வயதான வர்த்தகர் ஒருவர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தன் உயிரை மாய்த்துக்கொண்டார் என்று கூறப்படும் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
உயிரிழந்தவரின் மனைவி தனது கணவரின் மரணத்தில் சந்தேகம் நிலவுகின்றது என்று இறப்பு விசாரணைகளில் தெரிவித்துள்ளார். (எ-இ)

### தேரருக்குப் பிணை

கொழும்பு, நவ.29
அம்பிட்டிய சுமனரத்ன தேரர் உட்பட 4 பேருக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் நேற்றுப் பிணை அனுமதி வழங்கியுள்ளது.
மட்டக்களப்புக்கு ஜனாதிபதி வந்தபோது எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டமை தொடர்பான வழக்கிலேயே பிணை வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் வழியில் தமிழீழம் நடிகர் சத்தியராஜ் வாழ்த்து

சென்னை, நவ.29

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனின் வழியில் மாறிவரும் உலக சூழலை மனதில் இருத்தி செயற்படுவதன்மூலம் தமிழீழம் என்ற இலக்கை அடையப் பாடுபடவேண்டும் என தென்னிந்திய நடிகர் சத்தியராஜ் தெரிவித்துள்ளார்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனின் 69 ஆவது பிறந்தநாளை நாசத்தியராஜ் வழங்கியுள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நவம்பர் 26ஆம் திகதி தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனின் பிறந்தநாள்.

அவர் சொன்ன இரண்டு வாசகங்கள் எப்பவுமே பசுமையாக நினைவில் உள்ளன. ''பயத்தை விட்டுவிடு இல்லையேல் இலட்சியத்தை விட்டுவிடு. பயத்தையும் இலட்சியத்தையும் ஒன்றாக வைத்திருக்கமுடியாது. பயத்தை விட்டுத்தான் இலட்சியத்தை அடையமுடியும். இலக்கை அடைய முடியும்." மேதகு வே.பிரபாகரன் மட்டுமல்லாது உலகத் தமிழர்களது இலக்கு என்பது தமிழீழம்தான். மாறிவரும் உலக சூழலை மனதில் இருத்திக்கொண்டு அதன் மூலமாகப் புதிய அணுகுமுறையில் தமிழீழத்தை உருவாக்க சிந்தனையாளர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள், அறிவாளிகள் அனைவரும் சிந்திக்கவேண்டும். அதை நோக்கிச் செயற்பட வேண்டும் என்றார். (எ100)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 05 . 11 . 1924



மறைவு 28 . 11 . 2023

புளியங்கூடல் தெற்கு ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும்
கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட
எமது ஆலயத்தின் பொருளாளர் **திரு.லயன் கு.கங்கைவேணியன்**
அவர்களின் அன்புத் தாயார்

**குமாரசாமி மீனாட்சி**

அவர்கள் நேற்று (28.11.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரித்துக்கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(CS 27131)A-1

**ஆலய பரிபாலன சபை**
**சிற்பனை முருகன் ஆலயம்**
**வேலணை மேற்கு, வேலணை.**

"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ"

## மரண அறிவித்தல்

தோற்றம் 06.06.1955 **அம்பலவாணர் செல்வராசா** மறைவு 28.11.2023



கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் செல்வராசா நேற்று (28.11.2023) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் நாகேஸ்வரி தம்பதியரின் ஏகப்புத்திரனும், காலஞ்சென்ற ஐயாத்துரை செல்வமணி தம்பதியரின் மருமகனும், கிருசாலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் கௌசல்யா, மயூறி, குகன்ஜா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2023) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

(CS 27128)A-1

தகவல்:
**குடும்பத்தினர்.**

## விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவுகளில்

அன்னையின் மடியில் 27.07.1951



கர்த்தரின் அடியில் 29.11.2022

கடந்த 29.11.2022 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் றெஜி இராமச்சந்திரன் (றாஜன்)**

*ஆண்டொன்றும் ஆனதுவோ...*
*விண்ணக வாழ்வினிலே...*
*மாண்டவர் மீண்டதில்லை என்றும்*
*உலகியல் நியதியன்றோ...*
*ஆண்டவன் அழைத்து விட்டான்....*
*அருகினில் அடியவரை*
*நீண்ட காலம் ஆனாலும் அப்பா...*
*நினைவுகள் அழியாதெம் நெஞ்சினிலே...*

(CS 27127)A-1

அழியாத நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

**22/3, விதானையார் வீதி,**
**சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**

## பெயர் மாற்றம்

இல.11, மத்திய வகுப்பு, இடதுகரை, முத்துஐயன்கட்டுகுளம், ஒட்டிசுட்டானில் வதியும் **மோகனதாசன் விஜயகுமாரி** ஆகிய நான் எனது பெயரை **மோகனதாசன் கஜிபனா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **மோகனதாசன் கஜிபனா** என்றே கையொப்பமிடுவேன் என்று இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

**மோ.கஜிபனா**

(CR 41264)A-1

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 05 . 11 . 1924



மறைவு 28 . 11 . 2023

புளியங்கூடல் தெற்கு ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும்
கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட
எமது ஆலயத்தின் பொருளாளர் **திரு.லயன் கு.கங்கைவேணியன்**
அவர்களின் அன்புத் தாயார்

**குமாரசாமி மீனாட்சி**

அவர்கள் நேற்று (28.11.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரித்துக்கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(CS 27130)A-1

**ஆலய பரிபாலன சபை**
**இந்தன் முத்துவிநாயகர் ஆலயம்**
**புளியங்கூடல், ஊர்காவற்துறை.**



## சடலம் மீட்பு

*யாழ்ப்பாணம், நவ. 29*

*வடமராட்சி பருத்தித்துறைப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து இளைஞர் ஒருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.* (ம-100)

## மரண அறிவித்தல்

**சுப்பிரமணியம் சண்முகலிங்கம்**
**(சண்முகம்)**

தோற்றம்:21.09.1938 மறைவு:28.11.2023



சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகலிங்கம் (சண்முகம்) அவர்கள் நேற்று (28.11.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், கணபதிப்பிள்ளை இராசரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்வமணியின் அன்புக்கணவரும், ஜெயந்தி, ஜெயக்குமார் (கனடா), காலஞ்சென்ற ஜெயச்சந்திரன், ஜெயந்தினி (திருகோணமலை), பவனறஞ்சினி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 782 5325, 077 105 6496**

(CS 27129) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்வதெல்லாம் பொய்


சாலிய சாடல்

கொழும்பு, நவ.29

2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் பிரதம ராகப் பதவியேற்கும் எண்ணம் இருக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது விடயத்தில் பொய் கூறுகின்றார் என்று ஜனாதி பதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டு 'அரகலய' புரட்சி ஏற்பட்டபோது சுமுகமான அதிகாரமாற்றத்துக்காக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் முன்மொழிவுகள் அடங்கிய வரைவொன்றைத் தயாரித்தது. அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அதை அனுப்பியிருந் தோம். இந்தவிடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொய் யுரைக்கின்றார் என்று சாலிய பீரிஸ் கூறியுள்ளார். (ஏ-இ)

# எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றாதீர்



ஹக்கீம் கோரிக்கை

**கொழும்பு, நவ. 29**


**போர்க்குற்றம் இழைத்துக் கொண்டிருக்கும்இஸ்ரேலுக்குப் பணியாளர்களை அனுப்ப முற் படும் இலங்கையின் முயற்சி ஏற்புடையதல்ல.**

பலஸ்தீனர்களின் வீடுகள் பற்றி எரியும்போது அதில் சுருட்டுப் பற்றவைக்க முற்படக்கூடாது என்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'அப்பட்டமாக போர்க்குற்றம் இழைக்கப்பட்டா லும் இஸ்ரேல் தளபதிகளுக்கு அமெரிக்கா விசா வழங்குகின்றது. ஏனைய நாடுகளுக்கு மனித உரிமைமீறல் குற்றச்சாட்டு இருந்தால் வழங்கப் படுவதில்லை.

இது பற்றி நாமும் கேள்வி எழுப்பவேண்டும். இவ்வாறு போர்க்குற்றம் இழைக்கும் இஸ்ரே லுக்கு எமது நாட்டுப் பணியாளர்களை அனுப் பும் நடவடிக்கையானது, ஹிட்லர், யூதர்களைக் கொல்லும்போது அதனால் ஏற்படும் வெற்றிடத் துக்கு இலங்கையர்களை அனுப்புவதற்கு ஒப் பான செயலாகும்.' - என்றார். (ஓ-44)



# பாறியது தென்னை

கொடிகாமம், நவ.29

பருவமழை காரணமாக கோயிலாமனை நாவலர் சனசமூக நிலையத்தின் தென்கிழக்கு மூலையில் நின்ற நூறு வருடங்கள் பழைமையான தென்னை மரம் அடியோடு பாறி வீட்டின் மீது வீழ்ந் துள்ளது. இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்துள் ளது. (ஏ-159)



# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.29

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வவுனியா வடக்கு பிரதேசசபை பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டி நிகழ் வுகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு பிரதேசசபை கலாசார மண்டபத்தில் கடந்தபுதன்கிழமை நடை பெற்றது.

வடக்கு பிரதேசசபை செயலாளர் திருமதி மணிவண் ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலாளர் பிரதம அதிதியாகவும், பளை கல்விப்பணிப்பாளர் மற்றும் பிராந்திய உள்ளூ ராட்சி ஆணையாளர் சிறப்பு விருந்தினராகவும் பாடசாலை அதிபர்கள் மற்றும் சபைச் செயலாளர் விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பல்வேறு கலை நிகழ்வுகள் மற்றும் பரிச ளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன. (ரி-75)



# நீதிபதி நியமனம்

மன்னார், நவ. 29

மன்னார் மாவட்டத்தின் முதலா வது நீதிபதியாக அரியரட்ணம் வில்பிரட் அர்ஜுன் எதிர்வரும் முத லாம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கையின் நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக் கப்படவுள்ளார். (ரி-60)



# சான்றிதழ் வழங்கல்

கிளிநொச்சி பெண்கள் வாழ்வு ரிமைச் சங்கத்தின் ஏற்பாட்டில் 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட அடிப்படை மனித உரிமைச் சட்டம் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற் றுக்கிழமை நடைபெற்றது. நிகழ் வில் முதல் கட்டமாக 100 பேருக்குச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ரி-113)



# கௌரவிப்பு நிகழ்வு

மன்னார் பேசாலையில் விழிகள் 10 ஆவது நிறைவு தினத்தை முன் னிட்டு சங்கவி தியேட்டர்ஸ் அன்ட் பிலிம்ஸ் அனுசரனையுடன் விழிகள் கலா முற்றத்தின் 'கலை விழி' மற்றும் கலாவிபூஷணம்ஆகிய விருது வழங்கும் நிகழ்வு பேசாலை சங்கவி திரையரங்கில் அண்மையில் இடம் பெற்றது.

பேசாலை மூத்த கலைஞர்கள் சூசை ஞானப்பிரகாசம் லெம்பேட் மற்றும் செபமாலை விக்ரர் ஜெயபாலன்பர்ணாந்து ஆகியோருக்கு 'கலை விழி' விருதும்,சிரேஷ்ட ஊடகவியலாளர் எல்.கொன்சால் வாஸ் கூஞ்ஞ, ஓய்வுநிலை அதிபர் சீ.எம்.சேவியர் பர்னாந்து , ஓய்வுநிலை ஆசிரியர் எஸ்.ஏ.உதயன், டிவன்சி மாக்கஸ், புகைப்படக் கலைஞர் என்.நியூட்டன், எ.சுகந்தன் ரூபன் கூஞ்ஞ ஆகியோருக்கு கலாவிபூஷணம் விருதும், ஏ. மெடோசன் பெறோ தேசகீர்த்தி விருதும் செபஸ்ரியான் அல்போன்ஸ் பீரிஸ் 'உலக தமிழர் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ரி-60)



கிளிநொச்சி விவேகானந்தநகர் கணபதி அறக்கட்டளையின் ஏற் பாட்டில் மாவீரர் நாள் நிகழ்வும், பெற்றோர் மதிப்பளிப்பும் இடம் பெற்றது. (ம-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அடக்குமுறையால் நல்லிணக்கம் விளையாது

அரச அடக்குமுறைக்கரங்கள் மீண்டும் ஒருமுறை தமிழ் மக்களின் கழுத்தை நெரித்துள்ளன. போரில் உயிர்நீத்த தங்களின் உறவுகளை நினைவுகூர முயன்ற தமிழ் மக்கள் பொலிஸாரால் காட்டுமிராண்டித்தனமான முறையில் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு, தரவை துயிலும் இல்லத்தில் தமிழ் மக்களின் நினைவேந்தலுக்குத் திட்டமிட்டுத் தடை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. உயிர்நீத்த தங்கள் உறவுகளை நினைவுகூர்வது ஒவ்வொரு மனிதருக்குமான அடிப்படை உரிமை. இலங்கை என்ற ஜனநாயக நாட்டில் சிறுபான்மையின மக்களாகிய தமிழ் மக்களுக்கு அந்த அடிப்படை உரிமைகூட மறுக்கப்படுகின்றது. நாட்டில் ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் இன நல்லிணக்கம் பற்றி வாய் கிழியப் பேசினாலும், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க கிஞ்சித்தும் முயல்வதில்லை. 'தமிழ் மக்களின் பிரச்சினைகளை அறிவேன், எனக்கு யாரும் பாடம் எடுக்கத் தேவையில்லை' என்று தெனாவட்டுக் கதைகூறும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியிலும் அதுவே தொடர்கின்றது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒற்றுமையாக வாழ்வோம் என்று பாடமெடுக்கும் எவரும், தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் இவ்வாறான அடக்குமுறைகளை 'உரிமை மீறல்களைக்' கண்டுகொள்வதில்லை. இலங்கையில் நீளும் இந்தப் போக்கே பல தசாப்த காலப் போருக்குக் காரணமானது. பல தசாப்த காலப்போரால் நாட்டின் வளர்ச்சியும், பொருளாதார உயர்ச்சியும் பாதாளத்தில் வீழ்ந்திருக்கும் நிலையிலும், கடந்தகாலத் தவறுகளை பெரும்பான்மையினத் தலைவர்கள் இனங்காணவில்லை என்பதையே இப்போது நடக்கும் காட்சிகள் தெளிவாக்குகின்றன. கடந்த காலப்பட்டறிவின்படி, தவறுகளைத் திருத்திக் கொள்ளாமல் ஒற்றுமைப் பாடம் எடுத்து எதுவும் நடந்துவிடாது என்பதைத் தெற்குத் தலைமைகள் புரிந்துகொள்ளவேண்டும்.

நினைவேந்தல்களுக்கு இடையூறு, திட்டமிட்ட பௌத்த மயமாக்கல், அத்துமீறிய காணி பிடிப்பு என்று தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன நல்லிணக்கம் பற்றிப் பேசிப் பயனில்லை. நாட்டின் முன்னேற்றத்துக்காகவே பதவிக்கு வந்தேன் என்று நொடிக்கு நூறுதரம் கூறிக்கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்களின் ஒத்துழைப்பு இன்றி நாட்டை எந்தவகையிலும் முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்லமுடியாது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். நாட்டின் முன்னேற்றத்தில் உண்மையானஅக்கறை கொண்டவராக இருந்தால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளைத் தடுக்கவேண்டும்' அவர்களுக்கான உரிமைகள் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும். தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் இவ்வாறான அரச பயங்கரவாதத்தால் ஒருபோதும் நன்மைகள் விளைந்துவிடப்போவதில்லை. தொடர்ச்சியாக அடக்கப்படும் தமிழ்மக்கள் ஒரு கட்டத்தில் பொறுமை இழக்கும் நேரம் வரும். கடந்த காலத்திலும் அதுவே நடந்தது. எதிர்காலத்திலும் அது நடந்துவிடக்கூடாது என்பதே அனைவரதும் அவா. ஆனால் தற்போதுள்ள காட்சிகள் நாடு மீண்டும் பின்னோக்கிப் பயணிக்கின்றதா? என்ற அச்சத்தையே ஏற்படுத்தியிருக்கின்றன.





# ஆபத்தை எதிர்நோக்கும் 40 மருத்துவமனைகள்



**கொழும்பு, நவ.29**
**மூடப்படும் நிலையில் உள்ள மருத்துவமனைகளின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

இதுதொடர்பாக தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் என்று சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்தப் பணிப்புரை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை முழுவதும் தற்போது 40 அரச மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளன என்றும், 100 அரச மருத்துவமனைகள் மூடப்படும் நிலையில் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அரச மருத்துவமனைகளில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஆராய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தலைமையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க உறுப்பினர்களைக் கொண்ட விசேட குழுவொன்றை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## அதிகரிக்கும் தொழுநோய்



கொழும்பு, நவ.29
இந்த ஆண்டின் கடந்த மாதங்களில் சுமார் ஆயிரத்து 300 தொழுநோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என்று தொழுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.
ஜனவரி மற்றும் ஒக்ரோபர் மாதங்களுக்கு இடையே இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரத்து 256 நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் என்று தொழுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்தார். அவர்களில் 256 பேர்வரையில் கொழும்பு மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். (எ-இ)

## இலவச விசா

கொழும்பு, நவ.29
6 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இலவச நுழைவிசைவு வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.
சீனா, இந்தியா, ரஷ்யா, இந்தோனேஷியா, தாய்லாந்து, மலேசியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கே இலவசநுழைவிசைவு வழங்கப்படுகின்றது. (எ-இ)

## நாளை

30.11.2023
**வியாழக்கிழமை**
கார்த்திகை 14
சுபநேரம் : 07.44 - 09.14
ராகுகாலம் : 01.44 - 03.14

சங்கடஹர சதுர்த்தி

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023

"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்.

- தியோடர் ரூஸ்வெல்ற் -
(அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
05.11.1924

மறைவு
28.11.2023

## குமாரசாமி மீனாட்சி

வேலணை மேற்கு, புளியங்கூடலை பிறப்பிடமாகவும், பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி மீனாட்சி அவர்கள் நேற்று (28.11.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவரான சுப்பையா குமாரசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா, இரத்தினம், துரைசிங்கம், ராஜரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் வடிவாம்பிகை, கமலாம்பிகை, கங்கைவேணியன், சந்திரவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரசாத், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், கருணானந்தன் மற்றும் வாசுகி, செல்வராசா ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் சுதாகரன், சசிகரன், சசிகலா, சதீஸ்கரன், சிவகுமார், சிவசுதா, சிவரஞ்சன், துவாரகன், துஸ்யந்தி, பிரசாந்தி, சுகந்தி, கோகுலா, சஞ்சீவன், தீபிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2023) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4.00 மணியள்வில் பூதவுடல் பொரளை கனத்தை மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**கு.கங்கைவேணியன்**
**(வேணி களஞ்சியம்) 077 1611 865**
**மு.செல்வராசா**
**(கோகுல்- 4th Cross St, கொழும்பு)**
**070 7940 950**

**37/1, டீ பொன்சேகா றோட்,**
**கொழும்பு-04.**

(CS 27124) A-1

# கண்ணீர் அஞ்சலி



மனம் மகிழ
18.05.1949

மனம் நெகிழ
27.11.2023

காரைநகரைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட **லக்ஷன் றேடர்ஸ் உரிமையாளர் சண்முகதாசன் (ராசன்)** அவர்களின் தாயார்

## சண்முகசுந்தரம்பிள்ளை நாகேஸ்வரி

அவர்கள்

*அன்பால் மனதை அளாவிய தெய்வம்*
*அருகினில் இன்றி போனதே துன்பம்*
*முன்போல் எம்முன் இல்லையே இங்கு!*
*முழுத்துயர் தந்து போயினை எங்கு?*
*கண்போல் காத்த கருணைத் தாயே*
*காரைமண் பெற்ற பெருமை நீயே*
*உன்பால் இரங்கி வேண்டுகிறோம் வாராய்*
*உம் ஆத்மா அடைக சாந்தி!*

(CS 27125) S-1

| | | | | |
|---|---|---|---|---|
| **புதிய நதியா நகைமாடம்** இல. 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | **கந்தவேலன் றேடர்ஸ்** இல.110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | **பாலவிநாயகர் மோட்டோர்ஸ்** இல.08, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | **மைதிலி நகைமாடம்** 89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | **கவிஞர் வேலணையூர் சுரேஷ்** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2023ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 187 புள்ளிகளைப் பெற்று யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் 1 ஆம் இடத்தைப் பெற்ற

**செல்வி பிரகாசன் நேஷிக்கா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மென்மேலும் கல்வியிலும் ஏனைய கலைகளிலும் மேலோங்கி பல சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம்.




அப்பம்மா, மாமா, மாமி, அண்ணாமார்


## ஆசிரிய வாண்மை

யாழ்ப்பாணம், நவ. 29

வடமராட்சி ஆசிரிய வாண்மை விருத்தி நிலையத்தின் செயல்நிலை ஆய்வு மாநாடு நாளை 30ஆம் திகதி வியாழக்கிழமை முகாமையாளர் திருமதி அருந்ததி முகுந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல்துறைத் தலைவர் பேராசிரியை ஜெ.இராசநாயகம்கலந்துகொள்ள வுள்ளார். (ம)


## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்தல்- 2024
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை

2024ஆம் ஆண்டில் சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் தகைமை வாய்ந்த வழங்குநர்கள். ஒப்பந்ததாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வழங்கல்கள்**

01. அலுவலக உபகரணங்கள்/ தளபாடங்கள் / உருக்குவீட்டு உபகரணப் பொருட்கள்/ பிளாஸ்ரிக் பொருட்கள்.
02. காகிதாதிகள் மற்றும் எழுது பொருட்கள்.
03. மின்சார உபகரணங்கள் மற்றும் தெரு விளக்கு உபகரணங்கள்.
04. கொங்கிறீட் பொருட்கள்/ ஹியூம் குழாய்கள்/ சீமெந்துக் கற்கள்.
05. ரயர் வகைகள்/ ரியூப் வகைகள் / பற்றிவகை.
06. வாகனம். இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள்.
07. கணினிகள் மற்றும் கணினி துணைப்பொருட்கள்.
08. புகைப்படப்பிரதி இயந்திரம்/ தொலைநகல் இயந்திரம்/ ரோணியோ இயந்திரம்/ டுப்ளோ இயந்திரம்.
09. நூலக நூல்கள்.
10. சீமெந்து/ கண்ணாடி உற்பத்திகள்/ அலுமினியவேலைகள்/ இரும்பு உட்பட கட்டடப்பொருட்கள்.
11. அறிவித்தல் பலகைகள்/ பதாகைகள்/ பெனர் / ஸ்டிக்கர்.
12. துடைப்பம்/ விளக்குமாறு/ தும்புத்தடி/ தூரிகைகள்/ சிறியகால் துடைப்பங்கள்/ கழுவும் திரவங்கள்.
13. சிற்றுண்டி / மதியஉணவு

**சேவைகள்**

01. அனைத்து வகையான அச்சுவேலைகள்.
02. அலுவலக தளபாடத் திருத்தவேலைகள்.
03. கணினி துணைப்பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் திருத்த வேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்.
04. மோட்டார் வாகன திருத்த வேலைகள்/ சேவிஸ் செய்தல்.
05. பதாகைகள் மற்றும் பெயர்ப்பலகைகள் வரைதல்/ தயாரித்தல்/ அச்சடித்தல்
06. இறப்பர் முத்திரை தயாரித்தல்.
07. டியூப் ஒட்டுதல். ரயர்களுக்கு திரிவைத்தல். ரயர்களை மீள நிரப்புதல். ரயர்களை மாற்றுதல் போன்ற சேவைகள்.
08. நிர்மாண ஒப்பந்த வேலைகள்
09. ஏற்றியிறக்கும் வாகனங்களினை வாடகைக்கு விடல்
10. பாதுகாப்பு சேவை / சாரதி சேவை / சுத்திகரிப்புச் சேவை மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி இல. 0212241130 மூலமாகவோ அறிந்துகொள்ளலாம்.

**பொது நிபந்தனைகள்**

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நேரடியாகவோ அல்லது தொலை பேசி இல. 0212241130 மூலமாகவோ அறிந்துகொள்ளலாம்.

1. பதிவு செய்து கொள்ளும் அனைத்து வழங்குநர்களும் ஒவ்வொரு அம்சத்தின் பொருட்டும் வெவ்வேறான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வியாபாரப் பதிவுச்சான்றிதழின் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்ளும் நிர்மாண ஒப்பந்ததாரர்
    01. 50,000.00 ரூபா வரை 500.00
    02. 50,000.00 ரூபா முதல் 1,500, 000.00 வரை 1500.00
    03. 1,500,000.00 ரூபா முதல் 2,000,000.00 வரை 2000.00
    04. 2,000,000.00 ரூபாவுக்கு மேல் 2500.00
ஏனையோர் ஒவ்வொரு அம்சத்திற்கும் தனித் தனியாக 1000.00 ரூபா கட்டணத்தையும் செலுத்தவேண்டும்
2. தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடம் விலை மனுக்கள் கோரப்படும் என்பதுடன் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்தும் விலை மனுக்களைக் கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் வேறு பெறுகை செயற்பாடுகளைக் கையாளும் உரிமை சபையைச் சார்ந்தது.
3. இந்தச் சபையினால் வழங்கல் கட்டளை பிறப்பிக்கட்டப்பட்டு உரியகாலத்தில் பொருட்கள் சேவையை வழங்கத்தவறினால் முன்னறிவித்தலின்றி வழங்கல் கட்டளை இரத்து செய்து அடுத்த வழங்குநருக்கு கட்டளை அனுப்பப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும். குறித்தகாலத்தில் தரமான பொருட்கள் மற்றும் சேவை களை வழங்குவதற்குத் தவறும் வழங்குநர்கள்/ ஒப்பந்தகாரர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படும்.
4. விண்ணப்பதாரர்கள் அலுவலக நாட்களில் அலுவலகத்தில் உரிய கட்டுப்பணத்தைச் செலுத்தி விண்ணப்பிக்க முடியும் தபால் மூலம் விண்ணப்பிப்பதாயின் "செயலாளர்.வலிகாமம் வடக்கு பிரதேசசபை" என்னும் பெயருக்கு வரையப்பட்ட காசோலை மூலம் அல்லது வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் 7573141 இலங்கை வங்கி காங்கேசன்துறை கணக்கு இலக்கத்திற்கு வைப்புச்செய்து வைப்புச்சீட்டு மற்றும் விண்ணப்பப்படிவத்தினை பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.
5. எல்லா விண்ணப்பங்களும் 2023.12.28 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் செயலாளர். வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக் சமர்ப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2024 ஆம் வருடத்திற்கான வழங்குநர் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

செயலாளர்.
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை.

29.11.2023



THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

14 EDITION

# Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

JITF 2024

JANUARY ஜனவரி
19 20 21
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds
(Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)



LIMITED STALLS AVAILABLE

Automobile | Construction | Consumer Goods | Apparel
Hospitality | Agriculture | Travel & Tourism | IT | Education
Beverage, Packaging Industry and many more...

PLATINUM SPONSOR DIMO · GOLD SPONSORS · MEDIA SPONSORS · ORGANIZED BY LECS · SILVER SPONSORS Anchor, Hayleys Solar, PHOENIX



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில்

**2023 தரம் 5 புலமைப்பரில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பிரதேசத்திற்கு பெருமை தேடித்தந்த**


ஜெகநாதன் டேனுஷன்
181 புள்ளிகள்


மயூரன் நிதுஜன்
170 புள்ளிகள்


சுரேந்திரன் துவேனுஷன்
169 புள்ளிகள்


ஜசிந்தன் கேஷவ்
159 புள்ளிகள்

ஆகியோரை பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களுக்கு கற்பித்த ஆசிரியை திருமதி விஜயரஞ்சினி பாலகுமாரன் அவர்களையும், வழிப்படுத்திய அதிபர் திரு. க.சத்தியானந்தன் அவர்களையும் வளவாளராக செயற்பட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு.க.தவயோகராஜா அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

**வள்ளுவன் சனசமூக நிலையம்**
**மந்துவில் வடக்கு, கொடிகாமம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்தில் இந்து மதத்தினது வரலாற்று வளர்ச்சிப்போக்கு

இராசையா ஸ்ரீதரன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான இறைவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபாடியற்றுகின்ற சமயம் இந்துசமயம். இந்த இந்து சமயம் ஆதியும் அந்தமும் இல்லாதது. தொடக்கமும் முடிவும் இல்லாத இறைவனைப் போன்று இந்துசமயமும் விளங்குவதால் அதன் பெருமைக்கு எல்லையே இல்லை. ஈழமணித் திருநாட்டில் வாழும் இந்துக்கள், இந்து சமயத்தின் அருமையையும் பெருமையையும் உணர்ந்து அதனை நன்கு மதித்துப் பேணிப்பாதுகாத்து வருவதோடு, அதன் வளர்ச்சிக்கான தமது பங்களிப்பையும் செவ்வனே செய்து வருகின்றார்கள் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். இலங்கையின் வரலாற்றில் ஈடு இணையில்லாத இந்த இந்து மதத்தின் சிறப்புக்கள் பற்றி பல்வேறுபட்ட ஆதாரங்கள் இருக்கின்றன . இந்து சமயம் ஆதியும் அந்தமும் இல்லாதது. இது தோன்றிய காலம் யாருக்குமே தெரியாது. ஞானிகளும், ரிஷிகளும், சித்தர்களும், மகான்களும், அவதாரபுருசர்களும் இறைவனை வணங்குதற் பொருட்டு இந்துசமயத்தை தோற்றுவித்தனர் என்று சொல்லப்படுகின்றது.

முற்காலத்தில் வாழ்ந்த இந்துக்கள் கிரகங்களின் அமைப்புக்களையும் அந்தக் கிரகங்களின் இயக்கங்களையும் மிகத் துல்லியமாகக் கணக்கிட்டிருக்கின்றனர். ஓர் ஆண்டில் வானத்திலே நடைபெறுகின்ற இயக்கங்களை சரியாகக் கணக்கிட்டு பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டுள்ளனர். பாரத நாட்டில் மிகப் பழமையான சனாதன சமயம் இந்துசமயமாகும். ஹிந்து என்பது இந்துவாக மருவிற்று. ஹிந்து என்ற சொல்லிருந்து வந்தது தான் இந்து. இந்தியாவின் வடமேற்கே பாயும் இந்து நதியருகே நயக்கத்தக்க நாகரீகம் இருந்திருக்கின்றது. அங்கு வாழ்ந்த மக்கள் கூட்டத்தினர் இந்துக்கள் எனப்பட்டனர். இற்றைக்கு 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்து சமயம் தனிப் பெருமையும் தனித்துவமும் கொண்ட ஒரு சமயமாகும். இந்து சமயத்தின் கண்ணே நிறைவான பல விழுமியக் கருத்துக்கள் காலம் காலமாக பகிரப்பட்டு வந்திருப்பதுதான். இந்து சமயத்தில் பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்று நான்கு படிநிலைகள் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த நான்கு படிநிலைகளுக்குமான கடமைகளும் வாழ்க்கை முறைகளும் அழகாகக் கூறப்பட்டுள்ளன. இந்துசமயத்தின் இந்த படிநிலைகளில், முன்பு வாழ்ந்த நாயன்மார்கள் உதாரண புருஷர்களாக வாழ்ந்து காட்டி போயிருக்கின்றார்கள்.

## ஆறு வகையான வழிபாட்டு மரபு

இந்துசமயம் ஆறுவகையான வழிபாட்டு மரபுகளை உள்ளடக்கி நிற்கின்றது. சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்ற அறுவகை வழிபாட்டு மரபுகளில் சைவமே ஈழவள நாட்டில் ஏனையவற்றையும் உள்ளடக்கி நிற்பதோடு இந்துசமயம் என்றால் அது சைவசமயமே என்னும் பொருள்பட நிலைபெற்றிருக்கின்றது.

இலங்கையில் நிலைபெற்றிருந்த இந்துசமயம் பற்றி அறிவதற்கு யாழ்ப்பாண வைபவமாலை, ஸ்ரீதட்சணகைலாச புராணம், கல்வெட்டுக்கள், சரித்திர ஆராய்ச்சி நூல்கள் போன்றவை பெரிதும் உதவுகின்றன. இந்து சமயம் பண்டு தொட்டு இன்று வரை புனிதம் நிறைந்த உன்னத சமயமாகவே கணிக்கப்பட்டு வந்தது. இந்து சமயத்தவர்கள் ஆண்டவனைத் தேவர் என்றும், மிக்க கருணை உள்ளவர் என்றும், அவர் ஒருவரே தெய்வம் என்றும் போற்றி வழிபாடு செய்கின்றனர். ஆதியும் அந்தமும் இல்லாத இந்து மதக் கோட்பாடுகளையும் தத்துவங்களையும் வெளிநாட்டார் மிகவும் புகழ்கின்றனர். பழைமையும் பெருமையும் வாய்ந்த இந்த இந்துசமயத்தின் மிகச் சிறப்பான அம்சம் அதன் பரந்து விரிந்துள்ள தன்மையேயாகும்.

இந்துசமயம் ஓர் தனிநபரால் உருவாக்கப்பட்டதல்ல. பல நூறு வருடங்களாக சூரியன் முதலான இயற்கைச் சக்திகளை வணங்கிவந்த நம் முன்னோர் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு இந்து சமயத்தைக் கைக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. அத்துடன் கி.மு. 500 முதலாக ஈழநாட்டில் தமிழ் மன்னர்களின் ஆட்சி நிலவி வந்த காலத்தில் கதிர்காமத்திலே அரசோச்சிய கதிர்காம சூத்திரியர் பரம்பரை என்று ஒன்று இருந்துள்ளது. இந்த சூத்திரியர் காலத்தில் எழுதப்பட்ட பல பிரமிட் கல்வெட்டுக்களில் பிராமணர்கள் வாழ்ந்த குகைகள் பற்றியும் குகைகளின் பெயர்களில் நாக, சிவ என்றெல்லாம் இடம்பெறுவதால் இந்துமதம் நிலைபெற்றிருந்தமை பற்றியும் அறியமுடிகிறது. இது ஒரு புறமிருக்க சக்தியை வழிபடுவதில் இந்து மதத்துக்கு இருக்கின்ற பொதுமைப் பண்பு மகத்தானது. சிவனும் சக்தியும் சேர்ந்ததே சைவம் என்றும் கூறப்படுகின்றது. இந்த பண்பின் வழிவந்த வழிபாடுகளும் பல வருடங்களாக இந்து சமயத்தை உலகம் போற்றும் படியாகவும் அது பற்றிச் சிந்திக்கும் படியாகவும் வைத்திருக்கின்றது என்றால் அதுதான் சிறப்பும் மகத்துவமும் ஆகும்.

இன்றைய காலகட்டத்தில் நடப்பிலுள்ள பிற மதங்களுக்கெல்லாம் ஒவ்வொரு வேதநூல்கள் மட்டுமே சிறப்பாக விளங்குகின்றன. ஆனால் இந்து சமயத்தை பெறுத்த மட்டில் வேத, ஆகம, உபநிடத, புராண, இதிகாச நூல்கள் ஆழ்ந்த தத்துவங்களை உலகுக்கு எடுத்து கூறுவனவாக உள்ளன. மேலும் இவற்றில் பலவும் இந்துக்களின் பொதுமைப் பண்பினை வளர்ப்பனவாகவே காணப்படுகின்றன. ஆன்மீகத்தை வாழ்வியலோடு இணைக்க இன்றைய இளையதலைமுறை தயக்கம் காட்டுகின்றது. தத்துவங்களை ஏற்காது விட்டாலும் அடிப்படை உண்மைகளையேனும் ஏற்று நடந்தால் நன்மைகள் பெருகும். மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோரை வழிபடவேண்டும் என்பது இந்துசமயத்தின் கூற்று. இந்துசமய விழுமியங்களை எமது இளம் சமுதாயம் அனுட்டிக்கவேண்டும். ஒற்றுமை, சமாதானம், சாந்தி, சுபீட்சம், பக்தி, ஒழுக்கம், இல்லறம், விருந்தோம்பல் அறிவுடைமை, முயற்சி, புருஸார்த்தம், நன்றி முதலான விழுமிய உணர்வுகள் போற்றி பாதுகாக்கப்பட்ட வேண்டும். இது இந்துக்களின் கடமையாகும்.


## சமய நிறுவனங்களின் முன்னுள்ள பொறுப்பு

இந்துமதத்தின் பழமையையும் பெருமையையும் மேலும் வலுப்படுத்தி மக்கள் முன்கொண்டு செல்வதற்கு சமய நிறுவனங்கள் தம்மாலான பங்களிப்பை தவறாது வழங்கவேண்டிய காலமிது. இந்துக்கள் ஆலய வழிபாடு செய்வதற்கான வழிமுறைகளை அறிவுறுத்தி நேர்வழியில் நடக்கவும், நெற்றியில் நீறணித்து உண்மைச் சைவராக வாழவும், ஆலயங்களில் திருப்பணி வேலைகள் நல்ல முறையில் தொண்டுகள் செய்ய வழிவகைகளை ஏற்படுத்தி கொடுக்கவும் வேண்டும். சைவமும் தமிழும் வளரப் பாடுபட்டு உழைப்போமாக.

# பண்பாட்டு அம்சங்களுடன் வவுனியா பண்பாட்டுவிழா

வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா மாவட்டச் செயலக கேட்போர் கூட மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன். வவுனியா மாவட்ட செயலகம் இணைந்து நடத்திய வவுனியா மாவட்ட பண்பாட்டுப்பெருவிழா மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார் தலைமையில்இடம்பெற்றது. அமரர் 'பளையூர் பரா' கதிரைமலைநாதன் பரந்தாமன் அரங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன.





தமிழ் தாய்வாழ்த்தைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. நிகழ்வில் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய மாணவர்களின் கோலாட்டம், தமிழ் மகா வித்தியாலய மாணவர்களின் நாட்டார்பாடல், நேர்த அ(ப்)பி கலாமன்றம் வழங்கிய புத்தாக்கநடனம், அரங்காலயா ஆற்றுகைக்குழுவின் மண்ணிசை, முஸ்லீம் மகா வித்தியாலத்தின் றபான் நடனம் என்பன நிகழ்வை மெருகூட்டின.


விசேடமாக கலை இலக்கிய படைப்பாக்கதுறையில் ஆளுமைகளை வெளிப்படுத்திய கலைஞர்களுக்கு வவுனியம் விருதுவழங்கப்பட்டதுடன், கௌரவிப்பும் இடம்பெற்றது. நன்றி உரையை மாவட்ட காலாசார உத்தியோகத்தர் இ.திருலிங்கநாதன் நிகழ்த்தினார். நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க பி.ஏ.சரத்சந்திர, பிரதேச செயலாளர்களான நா.கமலதாசன், இ.பிரதாபன் மற்றும் தமிழருவி சிவகுமாரன், தமிழ்மணி அகளங்கன், மற்றும் மேழிக்குமரன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

-குமுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிக்கு வராத கண்ணீர்

கே.எஸ்.சிவஞானராஜா





இரண்டேகால் கோடி மக்களைக் கொண்ட இலங்கையில், சுமார் எழுபது இலட்சம் மக்கள் வறுமையின் விளிம்பில் பொறுமையை இழந்து பீதி கொண்டு தவிக்கின்றார்கள். அரச சேவை அல்லாத சமயோசிதமாக நிரந்தரமற்ற வேலைகளில் ஏராளமான மக்கள் நாளாந்த ஊதியம் மட்டும் பெறுகின்ற நம்பிக்கையற்ற வாழ்வோடு இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள்.

பெரும் பணபலம் கொண்டோர் தவிர ஏனைய ஒவ்வொருவரும் வயிற்றுக்கு எப்படிச் சோறிடலாம், மானத்தை எப்படிக் காப்பாற்றலாம், ஒழுகாத வீட்டில் எப்படி வாழலாம், பாதுகாப்பாக எப்போது வாழலாம், யாரிடம் கடன் வாங்கலாம், யாரிடம் கைநீட்டி இரங்கலாம், எப்போது சொந்த வீட்டில் நிம்மதியோடு வாழலாம், யன்னல்கள் இல்லாத சட்டைகள் எப்போது வாங்கலாம், கணந்தோறும் கற்பினை எப்படி கோர அகோரக் கண்களிலிருந்து தூரவிலகி வாழலாம், மடியில் குழந்தைக்கு எப்போது பால் சுரக்கும், அன்னம் பாலிக்க எப்போது அடுப்புகள் மூளும், ஆண்டவன் எப்போது கண் திறப்பான், நிவாரணம் எப்போது கிடைக்கும், என்னை நான் விற்க வேண்டுமா?, மரணம் கூட கூலி கேட்கிறதா? இவ்வாறு வானம் பார்த்த வயிறுகள் அழுத ஈரத்தினாலே இலங்கை கண்கடை தெரியாமல் அவர்களை வைத்தே சவாரி செய்கிறது.

கண்ணீரிலே இலங்கை படகோட்டுகிறதேயல்லாமல் அது தண்ணீரிலே இன்னும் பயணிக்கவில்லை. வறுமையின் நிறம் எதுவென்று இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. உடை, நடை, பாவனையை மட்டும் வைத்துக்கொண்டு வயிற்றினை அளக்க முடியவேமுடியாது. வயிறு அழுகிறது. வாய் சிரிக்கிறது. வறுமையின் உச்சமே வாழ்க்கையாகித் தடம்புரளுகிறது. குடும்பம் சின்னாபின்னமாகிறது. அவரவர் குடும்பத்துக்குள் மூன்றாமவர் வெகு இலகுவாகப் புகுந்து விடுகிறார்கள். மூன்றாமவரின் கட்டுப்பாட்டுக்குள் குடும்பம் சிக்கித் தவிக்கிறது. வயிற்றுக்குப் பணம் ஏதோ கிடைக்க, வடிவுகள் கரைத்துக் குடிக்கப்படுகிறது. ஆண்களே விபச்சார வேலைகளுக்கு முதலீடு செய்யப்பட்ட செய்தி ஆச்சரியப்பட வைத்துள்ளது. போரின் நிமித்தம் ஒரு இலட்சம் பெண்கள் அவரவரின் கணவர்மாரை கண்டு பிடிக்கமுடியாதவாறு தொலைத்தும் இழந்தும் காலனுக்கு இரையாக்கியும் அதனால் இரந்தும் வாழ்கின் றனர்.

இந்த ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தது மூன்று நான்கு அங்கத்தவர்கள் கல்விக்காகவும், வயிற்றுக்காகவும், பணத்துக்காகவும், உடை நடை பாவனைக்காகவும் இரவு பகலாகப் போராடிய வண்ணம் உள்ளனர். இவ்வாறும், இது போன்றும் சுமார் எழுபது இலட்சம் மக்கள் கால், அரை வயிறோடு கண்ணீரோடு வாழ்கின்றார்கள். இத்தகைய நலிவுற்ற நிலையிலே தான் போதையும் தவறான பாதையும் குழப்பமும், கலக்கமும், கலம்பகமும் ஏற்படுகிறது. தூய வாழ்வில் சாயும் நிலையும், சரியும் நிலையும் ஏற்படுகிறது.

ஒரு தொகுதி ஆண்கள் வசதியானவர்கள். தாம் குடும்ப நிலையில் கொடி கட்டிப்பறக்கும் நிலையில், தத்தமது உடற்பசியினைத் தணிப்பதற்கு நொந்து போனவர்களையும், நலிவடைந்தவர்களையும், அரவணைப்பதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தை உருவாக்கி வருவதையும் எம்மால் கூர்ந்து அவதானிக்கமுடிகிறது. காரணம் உள்ளுக்குப் போகும் சாப்பாடு அப்படி! அது அதற்கானது! அது என்ன செய்யும்! அது அதை நாடும். அது போதையாக இருந்தால் அக்கா, தங்கை ஏன் தாய் கூட தப்பவேமுடியாது. போதையைப் பாவிப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி அவர்களது கண்களுக்கு இரையாவது முதலில் பெண்களேயாவர். இந்த விடயங்கள் பெரும்பாலும் வீதிக்கு வருவதில்லை. எதையும் தெரியாமல் வதங்கி அழுந்தி கண்ணீரில் நனையும் பெற்றோர் ஒரு புறம், அடுத்து பெற்றோராலேயே சீரழிக்கப்படும் பிள்ளைகள் ஒரு புறம், எல்லாவற்றிற்குமப்பால் பிஞ்சிலே வெம்பிப் பழுக்கும் குமர குமாரிகள் காதல் வயப்பட்டு சேர்ந்ததும் முறிந்ததும் தற்கொலையாவதும் கண்ணீரின் வயப்பட்ட சரிதங்களே. இது எவ்வாறு எனில், வறுமையின் நிறம் அழகு. இதன் வழி மயங்குபவர்கள் தத்தமது வேட்கை முடிந்தவுடன், பணமே அவரவர் குணமாகிவிடுகிறது. பொதுவாக, காதலும் சரி கல்யாணமும் சரி கண்ணீரிலே காவியமாகிறது. சினிமாவைப் போல காதலையும் கல்யாணத்தையும் கொண்டு நடத்த முனைவதாலேயே வாழ்க்கை ஏமாற்றமாகிறது.

வாழ்க்கை என்பது ஒரு வரமாகும். அதனைத் துஷ்பிரயோகம் செய்தலாகாது. ஆனால் அதுவே நடக்கிறது. நூற்றுக்கு 40 வீதமான குடும்பங்கள் கண்ணீரோடும் கனாவோடும் வாழ்கிறார்கள். இன்னுமொரு 40 வீதமான குடும்பங்கள் ஒரேவீட்டில் சேராமல் கொள்ளாமல் பிரிந்தே வாழ்கிறார்கள். இதற்கப்பால், வீட்டிலே கிளி இருக்க அடுத்த வீட்டு மைனாவுடன் கூடிக்குலாவிப் பேச ஆசை கொள்பவர்களினால் கிளிகள் அழுகின்ற சோகத்தினைக் காண முடியாதுள்ளது. இன்னும் சில இன்னுமே பயங்கரமானது. திடீரென்று குடும்பப் பெண் தீயில் எரிந்து கொள்வாள். அல்லது தவறி கிணற்றில் விழுந்திடுவாள். எல்லாமே தற்கொலையென முடிவாக்கப்படும். இத்தனைக்கும் கண்ணீர் கங்கையாகி அணை உடைத்துப் பாயும். ஆனால் வீதிக்கு வருவதில்லை. இதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் வேறுயாருமல்ல. எமது கதிரைகளே. பெண்களின் கண்ணீர் வீதிக்கு வராது. ஆனால் இந்தக் கதிரைகளை அந்தக் கண்ணீர் நின்று தண்டித்தே தீரும்.

# எண்ணங்களே சாட்சியாய்!

சாம் ரமேஸ்குமார்.

இந்த உலகில் இரண்டு விதமான மனிதர்கள் வாழ்கின்றார்கள். ஒன்று தங்கள் மன அமைப்போடு சேர்ந்து பயணித்து அதன் இயல்பின்டி உலகியல் சார்ந்து வாழும் மனிதர்கள். மற்றையவர்கள் தங்கள் உண்மை இயல்போடு ஒன்றித்து தங்கள் ஆன்மாவை அனுபூதியில் கண்டு உணர்ந்து தெளிந்து வாழும் மனிதர்கள். இதில் இரண்டாம் தரத்தில் உள்ள மனிதர்கள் கோடியில் ஒருவராகவோ அல்லது இருவராகவோதான் நிச்சயம் இருக்க முடியும். எண்ணங்களை குவியல்களாகக் கொண்ட மன அமைப்பில் மட்டும் வாழத் தெரிந்த மனிதர்கள் எளிதில் உலகியலோடு பற்றுள்ளவர்களாக மாறிவிடும் அதே சந்தர்ப்பத்தில் கர்ம பந்தத்துக்குள்ளும் தாங்களாகவே கட்டுண்டுபோய் விடுவார்கள்.

இந்த உலகியல் மனிதர்கள் படைக்கும் பிரம்மா போலவும் காக்கும் விஸ்ணுபோலவும் தங்கள் மன அமைப்பில் திடீரென புதிய எண்ணங்களை படைத்துக் கொண்டும், அதை காத்துக் கொண்டும் உலகியலை இஷ்டம்போல் அனுபவிக்க தொடங்கிவிடுவர். அதாவது புதிய எண்ணங்களை படைத்தல் அல்லது உருவாக்குதல். புதிதாக உருவாக்கிய எண்ணங்களை காத்தல் அல்லது உயிர் கொடுத்துக் காப்பாற்றுதல். இவையிரண்டும் முறையே பிரம்மா, விஷ்ணுவின் செயல்களாகும். இருந்தும் தங்களால் படைத்து காத்த எண்ணங்களின் குவியல்களை அழிக்கும் சிவன்போல் இந்த மனிதர்கள் அழிக்கும் நுட்பமும் ஞானமும் அறவே அறியாதவர்களாகவே கர்ம பந்தத்துக்குள் இன்று வரை உளன்று வாழ்கின்றார்கள்.



ஆனால் எண்ணங்களின் தொகுப்பான மன அமைப்புக்குள் வாழாமல் அதன் எல்லைக்கு வெளியே பேரானந்தத்தை தம் உள்ளுணர்வுக்குள் அனுபவிக்கும் மனிதர்கள் புதிய எண்ணங்களை படைக்கவோ அல்லது உருவாக்கவோ இருக்கும் எண்ணங்களுக்கு உயிர் கொடுத்து அதை காப்பாற்றவோ சிறிதும் விரும்பாமல் அதிலிருந்து விலகி தங்கள் உண்மை இயல்போடு என்றும் சாட்சியாயிருக்க முயற்சிப்பார்கள்.

ஆனால் வைராக்கிய மனம் படைத்த சில தத்துவ ஞானிகள் மட்டுமே அழிக்கும் சிவன்போல ஏற்கனவே இருக்கும் எண்ணங்களை நிரந்தரமாக அழிக்கும் முயற்சியின் நுட்பத்தில் கைவரப் பெற்றவர்கள் எனலாம். அதாவது முள்ளை முள்ளால் எடுத்து பின் இரண்டு முற்களையும் வீசி எறிவதுபோல் ஒரு வைராக்கிய எண்ணத்தால் பிற எண்ணங்களை அழித்து பின் அந்த வைராக்கிய எண்ணத்தையும் முற்றாக அழிக்கும் செயலாகும். இவர்களே 'நான் கடவுள்' என்ற தத்துவ நிலையில் என்றும் நங்கூரமிட்டு இருப்பவர்கள்.

மனித மனதில் எண்ணங்களை நிரந்தரமாய் அழிப்பதும் அதனோடு உறவாடாமல் நிரந்தரமாய் விலகியிருந்து அதை சாட்சியாய் பார்ப்பதும் ஒன்றுதான். தன் உண்மை சுயத்தோடு எப்போதும் ஒன்றித்து இருக்கும் வரை இது பெரும்பாலும் சாத்தியப்படக் கூடிய ஒன்றே. அதனால்தான் ஆன்ம ஞானிகள் பெரும்பாலும் முத்தொழிலும் புரியும் மூம்மூர்த்திகளின் மாய வலைக்குள் அகப்படாமல் எண்ணங்களை சாட்சியாய் மட்டும் பார்த்துக் கொண்டு எவரும் உணராத பேரானந்த நிலையில் எப்போதும் தனித்து இருக்கின்றார்கள். ஏன்னென்றால் மனதில் எழும் எண்ணங்களை அழிக்க முற்படுவது கூட, புதிய எண்ணங்களின் உருவாக்கத்துக்கு வழிவகுத்துவிடும் என்பது சில ஆன்ம தத்துவ ஞானிகளின் கருத்தாய் இன்று வரை இருக்கின்றது. ஆனபடியால் தன்னை யார்? என உணர விரும்பும் ஒவ்வொரு மனிதனும். தன்னுள் உருவாக்கம் பெறும் எண்ணங்களை காப்பாற்றவோ அல்லது அழிக்கவோ முற்படாமல் அந்த எண்ணங்களை சாட்சியாய் மட்டும் பார்ப்பதே எண்ணங்களின் தொகுப்பான மனதிலிருந்து தன்னை பிரித்தறியும் நுட்பத்தை இலகுவாக பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில்

## 2023 தரம் 5 புலமைப்பரில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பிரதேசத்திற்கு பெருமை தேடித்தந்த






| ஜெகநாதன் டேனுஷன் | மயூரன் நிதுஜன் | சுரேந்திரன் துவேனுஷன் | ஜசிந்தன் கேஷவ் |
|---|---|---|---|
| **181 புள்ளிகள்** | **170 புள்ளிகள்** | **169 புள்ளிகள்** | **159 புள்ளிகள்** |

ஆகியோரை பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களுக்கு கற்பித்த **ஆசிரியை திருமதி விஜயரஞ்சினி பாலகுமாரன்** அவர்களையும், **வழிப்படுத்திய அதிபர் திரு. க.சத்தியானந்தன்** அவர்களையும் வளவாளராக செயற்பட்ட **ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு.க.தவயோகராஜா** அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**

## முத்துமாரி அம்பாள் அறநெறிப் பாடசாலை
## மந்துவில் வடக்கு, கொடிகாமம்.

(cs.41260) (N.1)

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் குடியியல் நடவடிக்கைக் கோவை பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் 101(2)ம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பம் தொடர்பில்

1. **பாலசிங்கம் பாலசுப்பிரமணியம்**
   செயலாளர், பரிபாலனசபை பிரான்பற்று
   பெரியவளவு முருகன் ஆலயம்
   சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு
2. **விநாசித்தம்பி ரஜித்காந்த்**
   உபதலைவர், பரிபாலனசபை,
   பிரான்பற்று பெரியவளவு முருகன் ஆலயம்
   பிரான்பற்று, பண்டத்தரிப்பு
3. **கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்**
   உறுப்பினர், பரிபாலனசபை
   பிரான்பற்று பெரியவளவு முருகன் ஆலயம்
   பிரான்பற்று, பண்டத்தரிப்பு

**- வழக்காளிகள்**

**வழக்கு இல. நம்பிக்கைச்சொத்து /45/2023**

**எதிர்**

1. **கோபாலப்பிள்ளை ஜெயரூபன்**
   தலைவர்,
   பரிபாலனசபை,
   பிரான்பற்று பெரிய வளவு முருகன் ஆலயம்.
2. **அப்பாத்துரை சின்னராசா**
   பொருளாளர், பரிபாலன சபை பிரான்பற்று
   முருகன் ஆலயம்.
3. **சண்முகநாதன் ஜெயச்சந்திரன்**
   சங்கானை வடக்கு, பிரான்பற்று.

**எதிராளிகள்**

**மேற்படி இலக்க வழக்கின் வழக்காளிகளால்**

I. இவ் வழக்கு விளங்கித் தீர்க்கப்படும் வரை 1 ஆம் எதிராளி பிரான்பற்று பெரியவளவு முருகன் ஆலயத்தின் முகாமைத்துவத்தில் பங்குபற்றக்கூடாது என்ற **இடைக்காலக் கட்டளையும்**

II. பிராதின் நிவாரணப் பந்தி 2 மற்றும் 3 இல் கூறப்பட்ட முகாமைத்துவ திட்டம் உருவாக்கப்படும் வரை குறித்த பிரான்பற்று பெரியவளவு முருகன் ஆலயத்தை நிர்வாகிக்க பெறுனர் அல்லது பெறுனர் குழுவை நியமிக்கும் **இடைக்காலக் கட்டளைக்கும்**

III. பெறுனர் அல்லது பெறுனர் குழு நியமனம் இடம்பெறும் வரை குறித்த ஆலயத்தின் உபதலைவர்களாக செயற்படும் 2 ஆம் வழக்காளி மற்றும் 3 ஆம் எதிராளி மற்றும் செயலாளராக 1 ஆம் வழக்காளி ஆகியோரின் கூட்டு தலைமையில் ஆலயம் நிர்வாகம் செய்யப்படவேண்டும் என்ற **இடைக்காலக் கட்டளைக்கும்**

**உள்ளிட்ட நிவாரணங்களைக் கோரி இவ் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.**

எனவே மேற்படி கோரப்பட்ட நிவாரணங்கள் தொடர்பில் குறித்த விடயத்தில் அக்கறையுள்ள நபர் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழ் அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ் வழக்கானது எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு 12 மாதம் 13 ஆம் நாளன்று இம் மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

**மன்றின் கட்டளைப்படி**

திகதி: 27.11.2023

பதிவாளர்,
மாவட்டம் நீதிமன்றம்
மல்லாகம்.

(cs.27116) (N.1)

# விநோ நகைப்பூங்கா

**185, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் 24.11.2023 வெள்ளிக்கிழமை தொடக்கம் இல. 177, கஸ்தூரியார் வீதி என்னும் முகவரியில் இயங்குகின்றது என்பதனை எமது வாடிக்கையாளருக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.**





**உரிமையாளரும், ஊழியர்களும்**
**விநோ நகைப்பூங்கா**
**இல. 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 25 சீனிவாசகம் வீதி. ஆதன இல 16. என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் இராசம்மா நடராஜா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். வண்ணார்பண்ணை மேற்கு சின்னப்பொடியர் கந்தப்பா முருகேசுவும் பெண் செல்லமும் அவர்கள் 17.01.1948ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஆர்.காராளசிங்கம் முகதாவில் 1291ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் யாழ்ப்பாணம். வண்ணார்பண்ணை மேற்கு கே. கே.நடராஜா பெண் இராசம்மாவுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை வேலுப்பிள்ளை கந்தையாவும். பொன்னுத்துரை ஸ்ரீபத்மநாதனும். பொன்னுத்துரை ஸ்ரீரங்கநாதனும். பொன்னுத்துரை ஸ்ரீகந்தராஜனும். பொன்னுத்துரை ஸ்ரீனிவாசனும். சரவணமுத்து வேலுப்பிள்ளை மகள் பூமணியும் சின்னப்பு செல்லப்பா பொன்னுத்துரை பெண் செல்வரத்தினம் ஆகியோர் 19.08.1979ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் மொகிடீன் மஞ்சூர் முகதாவில் 1042ம் இலக்க அறுதி உறுதி மூலம் கந்தமுத்து நடராஜா கைம்பெண் இராசம்மாவுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை நடராஜா கைம்பெண் இராசம்மா முதுசமாக நடராஜா சத்தியமூர்த்திக்கு வழங்கி யுள்ளார்.

குறித்த ஆதனத்தை நடராஜா சத்தியமூர்த்தி முதுசமாக நடராஜா சத்தியமூர்த்தி மகள் சீதாலெட்சுமி. நடராஜா சத்தியமூர்த்தி மகன் நதன் சத்தியாவிற்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை 14.02.2016ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ரட்ணம் ரகுராஜா முகதாவில் 7869ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதிமூலம் நடராஜா சத்தியமூர்த்தி மகள் சீதாலெட்சுமி. நடராஜா சத்தியமூர்த்தி மகன் நதன் சத்தியாவிற்கு வழங்கியுள்ளனர்.

ஆதன அட்டவணை

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை "பல்லுவிளித்தோட்டம்" நிலப்பரப்பு 1 குளி 8 7/8 நில அளவையாளர் எம்.அலோசியஸ் 18.01.1946ம் திகதி அளந்து விபரித்த 1136 இலக்க படத்தின்படி நிலப்பரப்பு ஒன்றுடன் குளி எட்டுடன் எட்டில் மேல் ஏழு உம் வீடும் கிணறும்.

**கிழக்கு:** தியாகன் அருணாசலத்தின் ஆதனம்.
**வடக்கு:** வீதி
**மேற்கு :** சின்னப்பொடியர் காண்டீபன் முருகேசு பெண் செல்வத்தின் ஆதனம்
**தெற்கு :** கந்தமுத்து நடராஜா கைம்பெண் இராசம்மாவின் ஆதனம். இதனடங்கலிற் சொரியலாய் அரைப்பங்கு.

தற்போது அற்றோனித்தத்துவக்காரர் சண்முகநாதன் பிரசாந்தன் மூலம் நடராஜா சத்தியமூர்த்தி மகள் சீதாலெட்சுமி. நடராஜா சத்தியமூர்த்தி மகன் நதன் சத்தியாவும் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமைகோராவிடத்து குறிந்த ஆதனமானது நடராஜா சத்தியமூர்த்தி மகள் சீதாலெட்சுமி. நடராஜா சத்தியமூர்த்தி மகன் நதன் சத்தியா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்யநடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

cr. 41246) (N.1)

# வாடகைத்தாய் தேவை

குழந்தை இல்லாத தம்பதியினர் வாடகை தாய் மூலம் குழந்தை பெற்று கொள்ள விரும்புகின்றனர். வாடகை தாயாக விரும்புகின்றவர் எம்மை தொடர்பு கொள்ளவும். வயது எல்லை 25 முதல் 35 வரை உங்கள் விபரங்கள் எல்லாம் இரகசியமாக பாதுகாக்கப்படும். **மேலதிக விபரங்களுக்கு**

**சசி : 00447555593074 Whats App மட்டும்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## ஶ்ரீமத் யோகராணி பன்னீர்ச்செல்வம்

*6/1, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்*

அன்பின் அம்மா, தங்கையே ஆண்டுகள் ஆயிரம்
ஆனாலும் நாம் உங்கள் அன்போடு



**நினைவு கூருவோர் :**

**மகன்**
- அஷான் பன்னீர்ச்செல்வம் (கொழும்பு)

**அக்கா**
- ஜெயமணி கீதபொன்கலன் குடும்பத்தினர்

**அண்ணன்**
- ஆசீர்வாதம் மாணிக்கம் குடும்பத்தினர் (லண்டன்)

**அக்கா**
- அருள்பாக்கியம் செல்வரத்தினம் குடும்பத்தினர்

**அக்கா**
- செல்வமணி சந்திரமோகன் குடும்பத்தினர்


**அண்ணன்**
- ராஜரெட்ணம் மாணிக்கம் குடும்பத்தினர்

**அண்ணன்**
- டானியல் (பபி) குடும்பத்தினர் (பிரான்ஸ்)

M.J.Rajaratnam
077 331 6402

**தோற்றம்** 10.06.1964 **மறைவு** 29.11.2022

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**தோற்றம்** 14.11.1990 **மறைவு** 30.10.2023

கடந்த (30.10.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த

## செல்வநாயகம் உமாசங்கர் (Babi)

(Assistant Manager, Alliance Finance Limited Chankanai)

அவர்களின் மறைவுத் துயரில் பங்கெடுத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பி ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள் வதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (29.11.2023) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியள வில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!**

**"விரபத்திரர் கோவிலடி"**
**சுழிபுரம் கிழக்கு,**
**சுழிபுரம்.**

(cs 27115) (N.1)

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Jaffna College Alumni Association
## Annual General Meeting

The Annual General Meeting of the Jaffna College Alumni Association will be held on Saturday, the 2nd of December 2023 at 9.30 a.m, in Ottley Hall, Jaffna College.

There will be a workshop service at the JDCSI Cathedral at Vaddukoddai at 9 a.m. prior to the meeting.

All members are requested to attend the meeting.

M.Thiruvarangan
Secretary,
Jaffna College Alumni Association

28 November 2023

(CS 27123) S-1

## புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் (வ.து)
## எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் கடமைக்கு உள்வாங்குவதற்கான வெளிவாரி விண்ணப்பம் கோரல்.

மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் எரிபொருள் நிலையத்திற்கு முகாமையாளராக கடமையாற்றுவதற்கு தகைமையுள்ள விண்ணப்ப தாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்ப முடிவுத்திகதி 2023.12.14ம் திகதி ஆகும்

1. கல்வித் தகைமை - க.பொ.த. சாதாரண பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி கணிதம் உட்பட 03 திறமைச்சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தியுடன் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தி.
2. வயதெல்லை - 18 தொடக்கம் 45 வரை
3. சம்பளம் - கடமையாற்றும் நாள் ஒன்றுக்கு ரூபா 1500.00 வழங்கப்படும் அத்துடன் வாழ்க்கைச்செலவுப்படியும் செயலாற்றுகைப்படியும் வழங்கப்படும்
4. பிணைவைப்பு- ரூபா 250000.00 அத்துடன் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுபவர் ஒவ்வொரு மாதச்சம்பளத்திலும் ரூபா 5000.00 மேலதிகமாக செலுத்துதல் வேண்டும்.

மேற்படி தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரம் கல்வித்தகைமை சான்றிதழ்களின் நிழற்பிரதிகளுடன் விண்ணப்பத்தினை தலைவர் புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு என்னும் விலாசத்திற்கு எதிர்வரும் 2023.12.14ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைப்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்**
**புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்.**
**புதுக்குடியிருப்பு**

## மக்கள் வங்கி
### பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் / சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப் பட்டுள்ளதும் ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட 14.12.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 15.12.2023 மற்றும் 16.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை |
|---|---|
| கிளை | யாழ்/ஸ்ரான்லி வீதி. தெல்லிப்பளை. யாழ்/பிரதான வீதி. ஊர்காவற்றுறை. நெல்லியடி. அச்சுவேலி. சங்கானை. சுன்னாகம். சாவகச்சேரி. வல்வெட்டித்துறை. யாழ் / பல்கலைக் கழகம். யாழ் / கன்னாதிட்டி. பருத்தித்துறை. கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய். கொக்குவில் (நாவலர் வீதி). மல்லாகம். காங்கேசன்துறை. உரும்பிராய். புத்தூர். பண்டத்தரிப்பு. கோப்பாய். அளவெட்டி. கைதடி. உடுப்பிட்டி. திருநெல்வேலி. கல்வியங்காடு. இணுவில். புலோலி. |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய. ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற. ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
தொ.பே. இல : **021-222 2601**

PEOPLE'S BANK
Pride of the Nation

## 17ஆவது நினைவலைகள்



வையத்தின் மைந்தனாக 16.08.1963
தெய்வத்தின் சொந்தமாக 06.12.2006

### அமரர் நாகமுத்து ரவிச்சந்திரன்

முன்னை நாள் ஆசிரியர், யா/ மிருசுவில் அ.த.க பாடசாலை
திதி : கார்த்திகை மாத அபரத்துதியை

தெய்வமே! எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் நீங்காது
எம்முள் இறையாகி என்றென்றும்
எமக்கு நல்லன தந்திடுவீர்

ஓம் சாந்தி!

**நீங்காத நினைவுகளுடன்**
**அன்பு மனைவி திலகவதி மற்றும் குடும்பத்தினர்**
**நாவற்காடு, வரணி.**

(CS 48032) (3/6)

### பாராட்டு விழா

அநுராதபுரத்தில் அண்மையில் இடம்பெற்ற தேசியமட்ட கர்நாடக சங்கீதப் போட்டியில் தனி இசைப்பிரிவில் பங்கு பற்றி முதலாம் இடத்தைப் பிடித்த யாழ்ப்பாணம் இடைக்காடு மகா வித்தியாலய மாணவன் கங்கேஸ்வரன் கோவர்ணன் மற்றும் அவருக்குப் பக்கவாத்தியம் இசைத்த மதியழகன் பிரதீப் ஆகியோர் பாடசாலைச் சமூகத்தால் நாளை கௌரவிக்கப்படவுள்ளனர்.

வித்தியாலய அதிபர் கு. அகிலனின் தலைமையில் இந்த கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ம)

## கீரிமலை நகுலேஸ்வரம் சிவன் திருத்தேர் அமைத்தலுக்குரிய விண்ணப்பங்கள் கோரல்

1. இத்திருத்தலத்திற்குரிய பிரதான தேர் ஆகம சிற்ப சாஸ்திர அடிப்படையில் அமைக்கப்பெறுவதற்கு திருவருள் கூடியுள்ளதால் தகுதியுள்ள ஆர்வமுள்ள ஆசாரியார்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்பட உள்ளது.
2. மேலதிக அமைப்பு விபரங்களையும் விண்ணப்ப படிவத்தையும் ஆதீனகர்த்தாவிடம் 06.12.2023 க்கு முன்னதாக தினமும் பகல் 10 மணியிலிருந்து 1 மணி வரையான காலப்பகுதியில் நேரில் தொடர்பு கொண்டு பெறலாம்.
3. ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலப்பகுதிக்குள் திருப்பணிச் சபையூடாக தேர் உருவாக்கம் நிறைவடைய விரும்பப்படும்.

**ஆதீனகர்த்தா.**
**உபயகாரர்** **தொ.பே. இல. 077 636 6338**

## கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்
05
05
1939



முருகன் அடியில்
25
11
2023

இணுவில் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபையின் முன்னாள் தலைவரும், பரம்பரை வழி உரித்தாளர்களில் ஒருவரும், தற்போதைய பரம்பரைவழி உறுப்பினரும் செயலாளருமான **ஆ.ரஜீவனின்** அன்புத் தந்தையும், வாழ்நாள் பூராவும் இணுவைக்கந்தனையே சரணடைந்து வாழ்ந்தவருமான


### இராமுப்பிள்ளை ஆறுமுகம்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து துயருற்றோம். அன்னாரின் ஆத்மாசாந்தியடைய வேண்டி இணுவைக் கந்தனைப் பிரார்த்திப்பதோடு துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைக் கூறுகின்றோம்

**தர்மகர்த்தா சபை**
**இணுவில் கந்தசுவாமி கோவில்.**

(CS 41253) (AL1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உதயனில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், நவ. 29
உதயன் பத்திரிகையின் 39ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு குருதிக்கொடை முகாமொன்று நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.
இளைஞர்கள், யுவதிகள், தன்னார்வலர்கள் எனப் பல தரப்பினரும் ஆர்வத்துடன் குருதிக்கொடை முகாமில் கலந்துகொண்டனர். (ம)

### சித்தங்கேணி இளைஞன் கொலை;

# சித்திரவதை செய்த இடத்தில் விசாரணைக் குழுவினர் ஆய்வு

யாழ்ப்பாணம், நவ. 29
வட்டுக்கோட்டை பொலிஸாரால் இளைஞர் ஒருவர் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட நிலையில், சித்திரவதைக்கு உள்ளானதாகக் கூறப்படும் இடத்தில் விசாரணைக் குழுவினர் நேற்று ஆய்வுப் பணிகளை முன்னெடுத்தனர்.
யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ரி.மேனன் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொண்ட குழுவினர் இந்த விசாரணைகளை முன்னெடுத்தனர். இதன்போது உயிரிழந்த இளைஞனுடன் உடனிருந்த மூன்றாவது சாட்சியான மற்றைய இளைஞன், சித்திரவதை இடம்பெற்ற இடங்களைக் காண்பித்தார். (ம-27-26)

# யாழில் மலையகத்தை உணர்வோம்

*யாழ்ப்பாணம், நவ. 29*
*கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்துடன், யாழ்ப்பாண சிவில் சமூக அமைப்புகள் இணைந்து நடத்தும் 'யாழில் மலையகத்தை உணர்வோம்' எனும் தொனிப் பொருளிலான நிகழ்வு, தந்தை செல்வா அரங்கத்தில் நாளை தொடக்கம் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெறவுள்ளது.*
*மலையக மக்களின் வாழ்வு, சவால்கள், அடைவுகள் மற்றும் தற்கால நிலைமைகள் என்பவற்றைப் பிரதிபலிக்கும் நடமாடும் அருங்காட்சியகம், கண்காட்சி, கலை நிகழ்வுகள், ஆவண திரையிடல், அரசியல் புலமைப் பகிர்வு மற்றும் ஆற்றுகை என்பனவும் இதன்போது முன்னெடுக்கப்படவுள்ளன.* (ம)

## வீதிக்கு...

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இதுவரை 39 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதைவிட விடுதலைப்புலிகளுடையதாக இருக்கலாம் என்று சந்தேகப்படும் ஆடைகள், துப்பாக்கி ரவைகள், பேனா, சயனைட் குப்பிகள், தகடுகள் என்பனவும் இந்த மனிதப் புதைகுழியில் இருந்து சான்றுப் பொருள்களாகக் கிடைத்துள்ளன.
அண்மையில் ஸ்கான் இயந்திரத்தின் உதவியுடன் அந்தப் பகுதியில் செய்யப்பட்ட ஆய்வின் அடிப்படையிலேயே, இந்தப் புதைகுழி இன்னும் மிகநீளமானதாகவும் மிக அகலமானதாகவும் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. குறிப்பாக வீதியின் கீழ்ப் பகுதியிலும் புதைகுழி இருக்கும் என்று நம்பப்படுகின்றது. இந்த நிலையில், இது தொடர்பான கலந்துரையாடலொன்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இன்று இடம்பெறவுள்ளது. தொடர்ச்சியான அகழ்வுப் பணிகள் தொடர்பில் இன்றைய கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்படலாம். (அ-ம)

## பிணையில்...

ஒருவர் மரணமடைந்துள்ளார்.
நெஞ்சுவலி ஏற்பட்டதையடுத்து நீதிமன்றத்தில் இருந்து நேரடியாக அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். எனினும், அவர் மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். (அ-ம-110)

## பிணை...

வும் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.
வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்துக்கு மிக அருகாமையில் தபால் நிலையத்துக்கு முன்பாக அரசுடன் இணைந்து செயற்பட்ட சிலரது படங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. 'மெய்யான தலைவர்கள்' என்ற தலைப்பில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த குறித்த பதாகைகளில் 'விடுதலைப் புலிகளால் அவர்கள் கொல்லப்பட்டனர்' என்பதான வாசகங்களும் எழுதப்பட்டிருந்தன. அதை முன்னாள் போராளியொருவர் நேற்றுமுன்தினம் அகற்ற முற்பட்ட நிலையில், அவரை வவுனியாப் பொலிஸார் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்டவர் நீதிமன்றத்தில் நேற்றுமுற்படுத்தப்பட்டபோது நீதிவான் அவருக்குப் பிணை வழங்கினார். அத்துடன், குறித்த சம்பவம் தொடர்பில் செய்தி சேகரித்த ஊடகவியலாளருக்கு எதிராகவும் பொலிஸார் வழக்குத் தொடர்ந்துள்ளனர். (அ-ம-110)

## மின்சாரம்...

தண்ணீர் இணைப்பைச் சரிசெய்வதற்காகச் சென்ற வேளையிலேயே மின்சாரம் தாக்கி அவர் உயிரிழந்தார். இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.
மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-27-9-20)

## அரசுக்குள்...

அரசுக்குள் பூகம்பம் வெடிக்கும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ எச்சரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கோத்தாபய ராஜபக்ச ஆட்சியில் இடம்பெறும் தவறை அன்று நானும், கம்மன்பிலவும் சுட்டிக்காட்டியபோது அமைச்சரவையில் இருந்து நாம் வெளியேற்றப்பட்டோம். அதுபோலவே ரொஷான் ரணசிங்கவும் தற்போது வெளியேற்றப்பட்டுள்ளார். அரசின் வீழ்ச்சிப் பயணம் ஆரம்பித்துவிட்டது என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. இது இத்துடன் நின்றுவிடாது. ஜனவரி மாதம் ஆகும்போது அரசுக்குள் மேலும் மோதல் வலுக்கும். ரொஷான் ரணசிங்க, சிறிலங்கா கிரிக்கெட் சபை தொடர்பிலேயே விமர்சனம் முன்வைத்தார். இது தொடர்பில் ஆராய்ந்து பார்த்து ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அதை விடுத்து ரொஷான் ரணசிங்க நீக்கப்பட்டுள்ளதன்மூலம், ஜனாதிபதியும், ஆளும் தரப்பினரும் கிரிக்கெட் சபையின் பக்கமே நிற்கின்றனர் என்பது உறுதியாகின்றது' - என்றார். (அ-ம-44)

## தேர்தலை...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
சித்தார்த்தன் மேலும் தெரிவித்ததாவது:-
'தென்னிலங்கையைப் பொறுத்தமட்டில் மாகாணசபை என்பது அதிகாரப்போட்டிக்கான விடயமாக உள்ளது. ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் அதிகாரப் பகிர்வுக்கான ஒரு நகர்வாக இது பார்க்கப்படுகின்றது. மாகாணசபை முறைமை முழுமையான தீர்வு அல்ல என்ற போதிலும், தீர்வு முயற்சிக்கான ஒரு ஆரம்பமாக உள்ளது. எனவே, மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும். அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதேச செயலகத்துக்கான கணக்காளர் நியமனம் இழுபறியில் உள்ளது. தமிழ் எம்.பி.க்கள் சென்று பேச்சு நடத்தினால் நியமிப்போம் என்பார்கள். பின்னர் முஸ்லிம் எம்.பி.க்கள் சென்று பேச்சு நடத்தினால் நிறுத்திவிடுவார்கள். ஆக, இது விடயத்தில் வாக்கு அரசியல் நடத்தவேண்டாம். வவுனியாவில் குடிப்பரம்பலை மாற்றியமைப்பதற்கான ஏற்பாடுகளும் இடம்பெறுகின்றன' - என்றார். (அ-ம-44)

## புலிச்...

பங்கேற்ற இளைஞரொருவர் யாழ்ப்பாணத்தில் நேற்று படையினாரல் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் - கொடிகாமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நினைவேந்தலில் கலந்துகொண்ட, கொடிகாமம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## நிமோனியாவால்...

21ஆம் திகதியன்று சிசேரியன் மூலம் குழந்தையைப் பிரசவித்த அவர், கடந்த 25ஆம் திகதி மருத்துவமனையில் இருந்து வெளியேறினார். 26 ஆம் திகதி நள்ளிரவு உடல்நலம் பாதிக்கப்பட்ட அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் மாலை அவர் உயிரிழந்தார்.
யாழ். போதனா மருத்துவமனைக்குச் சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். உடற்கூற்றுப் பரிசோதனையில் நிமோனியாக் காய்ச்சலால் உயிரிழப்பு ஏற்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ-ம-26-20-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"

## TECHNO WORLD

A/L தொழில்நுட்பப்பிரிவு

A/L 2023 பரீட்சைக்கு தோற்ற இருக்கும்
அனைத்து மாணவர்களுக்குரிய

**விசேட செயலமர்வு**

- 01,02,03 December 2023
  தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- 04,05,06 December 2023
  பொறியியல் தொழினுட்பவியல்
  உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்
- 07,08,09 December 2023
  ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம்

காலை 9.00மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை

இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 017 5346



கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்றுமுன்தினம் மாவீரர் தினம் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. பல்லாயிரம் மக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டு மாவீரர்களை கண்ணீர் மல்க அஞ்சலித்தனர். (ம)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 33 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* நிலப்பரப்பு, நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* பார்வையிடும் நேரம்: காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 071 173 3911
076 853 5022
076 213 7239

(CS 27104) A-1

## ஒத்திவைத்தால் ஆதரவு இல்லை

ஜனாதிபதி. தேர்தலை ஒத்திவைக்க முற்பட்டால் தற்போது இருக்கும் ஆதரவையும் இழக்கவேண்டிய நிலை அரசுக்கு ஏற்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் சப்ரகமுவ மாகாண ஆளுநரும், முன்னாள் அமைச்சருமான நவீன் திஸாநாயக்க.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல்கள் அடுத்த வருடம் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். அரசமைப்பில் மாற்றம் மேற்கொண்டு இந்தத் தேர்தல்கள் பிற்போடப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார். (எ-44)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.29

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு கழக மீள்பதிவு தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ரி-66)

## பயிற்சிப்பட்டறை

கிளிநொச்சி, நவ.29

சிறுவர்களுக்கான உடற் தகமைகளை விருத்தி செய்யும் பயிற்சிப் பட்டறை கிளிநொச்சி சரவணா நிதியத்தின் அனுசரணையுடன் இரணைமாதாநகர் பயிற்சி நிலையத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சியை முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் கே. டபிள்யு. விமலராஜன் வழங்கினார். (ரி-75)

## மாணவிகளுக்கு இலவச நாப்கின்

### கல்வியமைச்சர் செயற்றிட்டம்

கொழும்பு, நவ. 29

தரம் - 6 க்கு மேல் கல்வி பயிலும் மாணவிகளில் சுகாதார நாப்கின் தேவைப்படுவோருக்கு அதனை இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சி.எஸ்.ஆர். திட்டத்தின்கீழ் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது.


தரம் - 6 க்கு மேல் 12 இலட்சம் மாணவிகள் கல்வி பயில்கின்றனர்.

முதற்கட்டமாக அடுத்த வருடம் 3 இலட்சம் மாணவிகளுக்கு சுகாதார நாப்கின்கள் வழங்கப்படும். அதன்பின்னர் இந்த எண்ணிக்கை கட்டம் கட்டமாக அதிகரிக்கப்படும். கிராமியப் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். - என்றார். (ச-44-6)



## மரண அறிவித்தல்

தோற்றம்
20 - 01 - 1936



மறைவு
25 - 11 - 2023

### யோசப் எட்வேட் இராசநாயகம்

(ஓய்வு நிலை தொழிநுட்ப உத்தியோகத்தர் - நீர்ப்பாசனத் திணைக்களம், நற்கருணைப் பணியாளர் - OLR)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இல.40 மாட்டீன் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் எட்வேட் இராசநாயகம் அவர்கள் கடந்த (25.11.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப் மரியம்மா தம்பதியரின் மூத்த அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை மேரி யோசேப்பின் (அன்னம்) தம்பதியரின் மருமகனும், லூர்தம்மா (ஜெயம்) Retired Teacher- J/Holy Family Convent) அவர்களின் அருமைக் கணவரும், Dr. கமிலா றஜனி (Canada) லொறன்சிலா றொஜனி (Teacher - J/ St.Mary's Vidyalayam - OLR), றொணிகய் (Coordinator - Development Consultancy) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.சைர்னஸ் யோசப் (Canada), தர்மபூபதி (Principal - J/Kodikamam Government Vidyalayam), தனுஜா (Management Service Officer- Ministry of Agriculture, NPC) ஆகியோரின் அன்பு மாமனாரும், தூயனா, டிலக்ஷனா, கவின், ஹஷ்மினா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை (அன்ரோ சொப் உரிமையாளர்), மரியநாயகம் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் - மதுவரித் திணைக்களம்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.11.2023) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.40, மாட்டீன் லேன்,
யாழ்ப்பாணம். (CS 27097)(AK-1)

தகவல்:
குடும்பத்தினர்
021 222 9101, 077 358 2704

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org